மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை


மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 110* *ஏப்ரல் 2025*

# சிறிய மற்றும் பெரிய குழி நரிகள்

*PT# 293, April 1943, pp. 50-55*

“திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும்
சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள்.”
*(உன். 2:15)*



1. **வ**ருடத்தின் எல்லா காலங்களிலும் நேரங்களிலும் கர்த்தருடைய ஜனங்கள் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க தங்களைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்திக் கொள்வது அவசியமானதாகும் *(2கொரி.7:1)*. அது அனுதினமும் செய்யப்பட வேண்டும். ஆனால் கர்த்தருடைய ஞாபகார்த்தத்திற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்பும், அந்த காலத்திலும் அதற்குக் கொஞ்ச காலத்திற்குப் பிறகும் அது மற்றெல்லா நேரங்களை விட அதிகமாகச் செய்யப்பட வேண்டும். அதற்குரிய காரணமென்னவென்றால், வருடத்தின் இந்த காலத்தில் தேவன் தம்முடைய ஜனங்களில் ஒரு விசேஷித்த சீர்திருத்தலைத் தூண்டும்படிக்கு அவர்களை இன்னும் குறிப்பாக ஆராய்கிறார். அவர்கள் அவ்வாறு சீர்திருந்தவில்லையென்றால், அவர்களுடைய நிலையிலிருந்து அவர்களைத் தள்ள அவர் கட்டாயப்படுத்தப்படுவார். மேலும் தேவனுடைய ஜனங்கள் அவருடைய விசேஷித்த தயவிலிருந்து தள்ளப்படாதபடிக்கும், அவருடைய தயவிலிருந்து முழுமையாகத் தள்ளப்படாதபடிக்கும், இந்த சுத்திகரிக்கும் வேலையில் அவர்கள் அவரோடு ஒத்துழைக்க வேண்டுமென்றும் தேவன் விரும்புகிறார் *(1 கொரி. 11:31,32)*.

2. கர்த்தருடைய ஞாபகார்த்தத்தின் காலம் இவ்வாறு தேவ தயவிலிருந்து தள்ளப்படுவதற்குரிய விசேஷித்த காலமாகும் என்பது ஆறு பெரிய கொழித்தல்களெல்லாம், பஸ்கா காலத்திற்குச் சற்று முன்போ, அந்த காலத்திலோ அல்லது அதற்குச் சற்று பிறகோ நிகழ்ந்தன என்ற உண்மையிலிருந்து தெளிவாகிறது. இந்த காரியங்களைக் கருத்தில் கொண்டு, இந்த வசனத்தை இந்த காலத்தில் ஆராய நாங்கள் விரும்புகிறோம். அதைக் குறித்து நாம் எல்லோரும் தியானிக்கும்போது கர்த்தர் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பார் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனென்றால் அவருடைய கிருபையினால், நாம் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை எந்தளவிற்குச் சுத்திகரித்துக் கொள்கிறோமோ, பரிசுத்தமாகுதலைத் தேவபக்தியோடே எந்தளவிற்குப் பூரணப்படுத்திக் கொள்கிறோமோ, அந்தளவிற்கு நம்மை ஆசீர்வதிப்பார்.

3. வேதாகமத்தில் திராட்சச் செடிகள் மற்றும் திராட்சத்தோட்டங்கள் என்ற வார்த்தைகள் உருவகமாக உபயோகிக்கப்படுகின்றன. திராட்சச்செடி என்ற வார்த்தை ஒருமையில் உபயோகிக்கப்படும்போது, அது கர்த்தராகிய யெஷூஆவையும் சபையையும் குறிக்கிறது *(யோவா. 15:1-8)*. ஆனால் திராட்சச்செடிகள் என்று பன்மையில் உபயோகிக்கப்படும் போது பல்வேறு வகுப்புகளாக உள்ள திரள் கூட்டத்தாரைக் குறிக்க உபயோகிக்கப்படுகிறது *(ஆப. 3:17)*. திராட்சத் தோட்டங் - கள் என்பது கர்த்தருடைய ஜனங்களின் ஊழியம் மற்றும் அபிவிருத்தியின் செயல் எல்லையாக அவர்களையே அடையாளப்படுத்த உபயோகிக்கப்படுகிறது. இவ்வாறாக உண்மையான மற்றும் பெயரளவிலான கர்த்தருடைய ஜனங்களைக் கொண்டவர்களாய் இருந்த மாம்ச இஸ்ரயேலர்கள், அவர்களுடைய ஊழியம் மற்றும் அபிவிருத்தியின் செயல் எல்லையாக, பல வேத வசனங்

## தூது நிரல்

1. சிறிய மற்றும் பெரிய குழி நரிகள்.........1
2. நமது கர்த்தரின் ஞாபகார்த்தம் - 2025...15

களில் திராட்சத்தோட்டம் என்றழைக்கப்படுகிறார்கள் *(ஏசா. 5:1-7; மத். 21:33-46).* மேலும் மாம்ச இஸ்ரயேலர்கள் சுவிசேஷ யுகத்தின் உண்மையான மற்றும் பெயரளவிலான தேவ ஜனங்களை அடையாளப்படுத்துவதால், சுவிசேஷ யுகத்தின் உண்மையான மற்றும் பெயரளவிலான தேவ ஜனங்களுக்கும், அவர்களுடைய ஊழியம் மற்றும் அபிவிருத்தியின் செயல் எல்லையாக இருப்பதற்கும், ஏசா.5:1-7 வசனங்கள் பொருந்தும். மேலும் சிறுமந்தை வகுப்பார், திரள் கூட்டத்தார் மற்றும் வாலிபரான பாத்திரவான்களைக் கொண்ட தேவனுடைய உண்மையான ஜனங்களின் ஊழியம் மற்றும் அபிவிருத்தியின் செயல் எல்லையாக அவர்களையும் அடையாளப்படுத்த திராட்சத்தோட்டம் உபயோகிக்கப்படுகிறது *(மத். 20:1-16).*

*4.* வேதாகம உருவகங்களில் நரிகள் என்பது விசுவாசம் மற்றும் நடத்தையிலுள்ள தவறுகளைக் குறிக்க உபயோகிக்கப்படுகிறது. மற்ற காரியங்களுடன், இதை நாம் சிம்சோனின் நரிகள் பற்றிய இரு பிரயோகங்களில் காண்கிறோம். இதை நாம் *E.Vol. 10,* பத்தி *7*-ல் காண்கிறோம். இதுவே நம்முடைய பாட வசனத்தின் பிரயோகமாகவும் இருக்கிறது என்பது வெளிப்படையாயிருக்கிறது. மேலும் இவ்வசனத்தில் அது இன்னும் விசேஷமாக நடத்தையிலுள்ள தவறுகளைக் குறிக்க உபயோகிக்கப்படுகிறது. இருந்தாலும் அவைகளை மட்டுமே குறிக்கிறது என்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. இவ்வசனத்தின் உருவகமான நரிகளினால் எவ்வித விளைவுகள் உண்டாக்கப்படுகின்றனவோ, விசுவாசம் மற்றும் நடத்தையிலுள்ள தவறுகளினாலும் அதேவித விளைவுகள் உண்டாக்கப்படுகின்றன.

*5.* இந்த தவறுகள் அதிகமாகவோ குறைவாகவோ பின்வரும் இயல்புகளின் சீர்கேடு சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன: *(1)* மதரீதியான இயல்புகளிலுள்ள சீர்கேடு - அவிசுவாசம், அதைரியம், சுய கட்டுப்பாடின்மை, விடாமுயற்சியின்மை, தேவபக்தியின்மை, சகோதர பற்றின்மை மற்றும் அன்பின்மை; *(2)* நேரடியாகச் செயல்படும் சுயநலம் சம்பந்தப்பட்ட சீர்கேடு, அதாவது பெருமை, பகட்டு, சோம்பல், கோழைத்தனம், சண்டை செய்யும் தன்மை, நேர்மையின்மை, பொருளாசை, மிதமின்மை, மிதமிஞ்சிய சுயபாதுகாப்பு, வெறுப்பு, தீய எண்ணம், புறங் கூறுதல், மற்றவர்களுக்கு அழிவை உண்டாக்கும் இயல்பு ஆகியவை; *(3)* நேரடியாகச் செயல்படும் சமூக பற்று சம்பந்தப்பட்ட தவறுகள் - எதிர் பாலினர்கள், கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள், சகோதரர்கள், சகோதரிகள், சிநேகிதர்கள், வீடு, சுயதேசம் ஆகியவைகள் சம்பந்தமாகச் சமூக பற்றின்மை சம்பந்தப்பட்ட சீர்கேடு; *(4)* சுயநலத்தோடு இணைந்த சுயநல, மதரீதியான மற்றும் சமூக இயல்புகளிலுள்ள தவறுகள் சம்பந்தமான சீர்கேடு, ஏனென்றால் சீர்கேடான சுயநலத்தின் தவறுகள் எல்லாம் மேலே சொல்லப்பட்ட சுயநல, மதரீதியான மற்றும் சமூக இயல்புகளிலுள்ள தவறுகளுடன் இணையக் கூடும்; *(5)* சீர்கேடான சமூக இயல்புகள் மதரீதியான, சமூக மற்றும் சுய இயல்புகளுடன் இணைவதினால் உண்டான சீர்கேடு, ஏனென்றால் இந்த தவறுகள் தனியாக மட்டும் செயல்படுவது அவசியமில்லை. பல நேரங்களில் அவைகள் ஒன்று மற்றொன்றோடு இணைந்து கிரியை செய்யும். எடுத்துக்காட்டாக பொருளாசை என்பது பல நேரங்களில் மூடநம்பிக்கை, தவறான விசுவாசம், வீட்டின் மேலுள்ள சீர்கேடான பற்று அல்லது தேசத்தின் மேலுள்ள சீர்கேடான பற்று ஆகியவற்றுடன் இணைந்து கிரியை செய்வதை நாம் காண்போம். மேலும் பல நேரங்களில் சண்டை செய்யும் இயல்பானது, தவறான வழிபாடுகளுடனும், தவறான குடும்ப பந்தங்களுடனும் இணைந்து கிரியை செய்யும். ஒரு இயல்பிலுள்ள தவறுகளினால் செய்யப்படுகிற பாவங்களைக் காட்டிலும், சீர்கேடான பண்புகள் இணைவதினால் அதிக பாவங்கள் செய்யப்படுகின்றன. தனி இயல்புகளிலுள்ள தவறுகளும், பல இயல்புகள் இணைவதினால் வரும் தவறுகளும் முழுமையாக வளரும்போது, அவைகள் நம்முடைய பாட வசனத்தில் சொல்லப்பட்ட நரிகளுக்கு ஒத்திருக்கின்றன. தனி இயல்புகளிலுள்ள தவறுகளும், பல இயல்புகள் இணைவதினால் வரும் தவறுகளும் அதிகமாக வளராதிருக்கும் போது சிறு நரிகளுக்கு ஒத்திருக்கின்றன.

*6.* பெரியவைகளாக அல்லது சிறியவைகளாக இருக்கும் இந்த நரிகள், பெயரளவிலான மற்றும் உண்மையான தேவ ஜனங்கள் இருவருக்கும் தீங்கு விளைவிக்கும். பழைய ஏற்பாட்டின் காலத்திலும் சுவிசேஷ யுகத்திலும் அவைகள் அவ்வாறு தீங்கு விளைவித்தன. இரு காலங்களைப் பற்றிய வேத வசனங்களிலிருந்து இது உண்மையாயிருப்பதை நாம் காண்கிறோம். தேவன் அவருடைய இரு இஸ்ரயேலர்களைக் கடிந்து கொண்டு தண்டிப்பதற்கு அவைகள் காரணமாக இருந்தன. ஏனென்றால் இந்த தவறுகள் தேவ ஜனங்களின் பிரகாசிப்பித்தலையும், நியாயமாகுதலையும், பரிசுத்தமாகுதலையும், விடுதலையாகுதலையும் கெடுக்கின்றன. அவைகள் அவர்களை பாவத்திற்குள்ளும் தப்பறைக்குள்ளும் கொண்டு செல்கின்றன. அவைகள் எந்தளவிற்குக் கிரியை செய்ய அனுமதிக்கப்படுகின்றனவோ, அந்தளவிற்கு அவர்களுடைய உயர்நிலை இயல்புகளையும், குணநலன்களையும், அவைகள் சேதப்படுத்துகின்றன. நிச்சயமாக அவைகள் கர்த்தருடைய ஜனங்களுக்கு அழிவை உண்டாக்குகின்றன.

*7.* சில அம்சங்களில் சிறு நரிகள் , பெரிய நரிகளைவிட அதிக அழிவை விளைவிக்கின்றன. ஏனென்றால் பெரும்பான்மையான தேவனுடைய ஜனங்களிலுள்ள தவறுகள் பெரியவைகளாக அல்லாமல், சிறியவைகளாக இருக்கின்றன. சொல்லர்த்தமான சிறு நரிகளும் கூட அவைகளுடைய அதிக அனுபவமின்மையினாலும், குறைவான எச்சரிப்போடிருக்கும் தன்மையினாலும் இயற்கையான திராட்சத்தோட்டங்களில் சொல்லர்த்தமான பெரிய நரிகளைவிட அதிக அழிவை உண்டாக்கும். நாம் சுயவெறுப்பு, உலக வெறுப்பு, விழித்திருத்தல், ஜெபம், கர்த்தருடைய வார்த்தையைத் தியானித்தல், பரப்புதல், அப்பியாசித்தல் மற்றும் அந்த வார்த்தைக்கு உண்மைத்துவத்தின் நிமித்தம் தீமையைச் சகித்தல் ஆகியவை சம்பந்தப்பட்ட காரியங்களைக் கவனிக்கும் போது,நம்முடைய நரிகள் உண்டாக்கும் அழிவை நாம் எளிதாகக் கண்டுணருவோம்.

*8.* நாம் ஒருவர் மற்றொருவரின் நலனுக்காக, இந்த பெரிய மற்றும் சிறிய நரிகளைப் பிடிக்க வேண்டுமென்று நம்முடைய பாட வசனம் நமக்குக் கட்டளையிடுகிறது - "நமக்குப் பிடியுங்கள்" சொல்லர்த்தமாக, “நமக்காகப் பிடியுங்கள்.” நாம் ஒவ்வொருவரும், நம்முடைய முழு சகோதர ஐக்கியத்தின் நலன்களுக்காகவும், நம்முடைய சொந்த நலன்களுக்காகவும், நம்முடைய பெரிய மற்றும் சிறிய தவறுகளை பிடித்து, அவைகளைச் செயலற்றவைகளாக ஆக்க வேண்டுமென்று, ஆம் நம்மால் இயன்றவரை அவைகளை நிர்மூலமாக்க வேண்டுமென்று இது அர்த்தப்படுத்துகிறது. ஏனென்றால் நம்

முடைய தவறுகள், அந்த தவறுகளை உடையவர்களாக நமக்கு தீங்கு விளைவிப்பது மட்டுமல்ல, நம்முடைய சகோதரர்களுக்கும் தீங்கு விளைவிக்கும். ஒருவரிலுள்ள தொற்றுநோய் மற்றவர்களிலும் பரவுவதற்கு இது ஒத்ததாக இருக்கிறது. மேலும் இந்த தவறுகள் எப்போதுமே முழு சகோதர ஐக்கியத்திற்கும் அசௌகரியத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்கும்.

*9.* விசுவாசிகளின் குடும்பங்களில் இதை நாம் காண்கிறோம். அவைகள் குடும்பத்தில் பல பிரச்சனைகளை உண்டாக்கி இருக்கின்றன. நம்முடைய எக்லீஷியாக்களிலும் இதை நாம் காண்கிறோம். எக்லீஷியா அங்கத்தினர்களுக்கு வருகிற கிட்டத்தட்ட எல்லா பிரச்சனைகளுக்கும் இந்த தவறுகளே காரணமாக இருக்கின்றன. மேலும் பொது சபை ஐக்கியத்திலும் இதை நாம் காண்கிறோம். மற்ற காரியங்களுடன், சபையின் வழிகாட்டிகளிலுள்ள தவறுகள் பல நேரங்களில் விசுவாசத்தின் முழு கூட்டத்திற்கும் கஷ்டங்களை உண்டு பண்ணுகின்றன. எடுத்துக்காட்டாகச் சுவிசேஷ யுக அறுவடை காலத்தின் வழிகாட்டிகளின் அதிகாரத்தை அபகரிக்கும் மற்றும் இறுமாப்பாய் ஆளும் இயல்புகள் ஆறு பொதுவான கொழித்தல்களை உண்டாக்கி இருக்கின்றன. அவைகளினால் உண்டான மோசமான தீமைகளை நாம் இரண்டாம் மரணக்காரர்களிலும், நியாயமாகுதலை இழந்தவர்களிலும், தீட்டுப்படுத்தப்பட்ட வாலிபரான பாத்திரவான்களிலும், வெளிப்படுத்தப்பட்ட திரள்கூட்ட அங்கத்தினர்களிலும், சில ஆசாரியர்களிலும் கூட காணக் கூடும்.

*10.* ஆகையால் நம்முடைய சொந்த நலனுக்காக மட்டுமல்ல, முழு சகோதர ஐக்கியத்திற்காகவும், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பெரிய மற்றும் சிறிய நரிகளைப் பிடித்து, சங்கிலிகளால் கட்டி, சிறைப்படுத்தி, அழிக்க வேண்டும். விசுவாசம், நம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிதல் ஆகியவைகளும், மற்ற குணநலன்களும் இதைச் செய்ய நம்மை ஊக்குவிக்கும். ஏனென்றால் தேவ வார்த்தை மற்றும் தேவனுடைய பரிபாலனத்தினால் ஆதரிக்கப்படுகிற இந்த குணநலன்களே இந்த நரிகளைப் பிடிப்பதற்கு நம்மிடமுள்ள முக்கிய கருவிகளாக இருக்கும். ஆகையால் இந்த உருவகமான நரிகளைப் பிடிப்பதென்பது, அவைகளைப் பிடித்து, சிறைப்படுத்தி, அழிப்பதை அர்த்தப்படுத்தும்.

## பற்றுதல்களைத் தீமையிலிருந்து பிரித்து வைப்பது

*11.* நம்முடைய பாட வசனம் எதை அர்த்தப்படுத்துகிறது என்பதைப் பார்த்த பிறகு, நம்முடைய பெரிய மற்றும் சிறிய நரிகளை நமக்காகப் பிடிப்பதற்குரிய செயல்முறைகளை நாம் ஆராய்ந்து அப்பியாசிப்பது ஏற்றதாயிருக்கும். இந்த செயல் முறைகளில் முதலாவது, தீமையிலிருந்து நம்முடைய பற்றுதல்களைப் பிரித்து வைப்பதென்பதாகும். நாம் மரபு வழியாகப் பெற்றுக் கொண்ட மற்றும் நம்முடைய வாழ்க்கையில் வளர்த்துக் கொண்ட சீர்கேட்டின் காரணமாக, நம்முடைய விழுந்து போன மனசார்புகள் தீமைகளை நேசிக்கின்றன. நம்முடைய தவறுகள் இந்த தீமைகளைப் பற்றிக் கொள்கின்றன. இவ்வாறாக, சண்டை செய்யும் இயல்புடையவர்கள் சண்டைகளை விரும்புகிறார்கள். பொருளாசை உள்ளவர்கள் மிதமிஞ்சிய அளவிற்குக் காரியங்களைப் பெற்றுக் கொள்ளவும் தக்க வைத்துக் கொள்ளவும் விரும்புகிறார்கள். பெருமையுள்ளவர்கள் அகந்தையுள்ள தன்னம்பிக்கையையும், சுயதிருப்தியையும், சுய உயர்த்துதலையும் விரும்புகிறார்கள். பகைமை இயல்புடையவர்கள், அவர்கள் வெறுக்கும் காரியங்களுக்குத் தீங்கு விளைவிக்க விரும்புகிறார்கள். வீண் புகழை நேசிக்கும் இயல்புடையவர்கள் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள். மூட நம்பிக்கையுள்ளவர்கள் தப்பறையை விரும்புகிறார்கள். போஜன பிரியர் அதிகமாக உண்ண விரும்புகிறார்கள். குடி பழக்கமுள்ளவர்கள் அதிகமாக மது அருந்த விரும்புகிறார்கள். கற்பற்றவர்கள் விபசாரத்தை விரும்பி வேசித்தனம் பண்ணுகிறார்கள். ஆகையால் நம்முடைய தவறுகளைப் பிடிப்பதற்குத் தேவையான முதல் காரியம், அவைகள் நேசிக்கிற காரியங்களிலிருந்து நம்முடைய தவறுகளைப் பிரித்து வைப்பதென்பதாகும்.

*12.* அவைகளுடைய தீமையான தன்மை, பிரயோஜனமற்ற தன்மை, நமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கும் தன்மை ஆகியவைகளை பற்றிய சிந்தனைகளையும், அவைகளுக்கு எதிரிடையான பண்புகளின் நல்ல தன்மை, பிரயோஜனமான தன்மை, அவைகளினால் நமக்கும் மற்றவர்களுக்கும் வரும் ஆசீர்வாதமான விளைவுகள் ஆகியவற்றைப் பற்றிய சிந்தனைகளையும் நம்முடைய மனதில் வைத்துக் கொள்ளும்போது நம்முடைய பற்றுதல்களைத் தீமையிலிருந்து பிரித்து வைக்கக் கூடும். நம்முடைய மனதில் நாம் வைத்துக் கொள்கிற இந்த சிந்தனைகளையும், நம்முடைய நல்ல பற்றுதல்களையும், சித்தத்தையும் அவைகளுடைய வல்லமையையும் உபயோகித்து அந்த தவறுகளைப் பற்றிக் கொண்டு, அவைகளுடைய இலக்குகளின்மேல் அவைகளுக்கிருக்கும் விருப்பத்தை அகற்ற வேண்டும். இவ்வாறாக இந்த தவறுகளிலிருந்து நம்முடைய பற்றுதல்களைப் பிரித்தெடுக்க நாம் திராணி அடைவோம். இது நமக்கு அவைகளின் மேல் முழுமையான வெற்றியை அளிக்கவில்லையென்றாலும், ஓரளவிற்கு வெற்றியை அளிக்கும்.

## தீமைகளிலிருந்து நம்முடைய கவனத்தைத் திருப்புவது

*13.* நமக்காகவும், நாம் ஒருவர் மற்றொருவருக்காகவும் நம்முடைய பெரிய மற்றும் சிறிய நரிகளைப் பிடிப்பதற்கு உதவும் மற்றொரு செயல் முறையானது, அவைகளைத் திருப்திப்படுத்துவதற்காக அவைகள் செய்யும் வேண்டுதல்களிலிருந்து நம்முடைய கவனத்தை நீக்கி, நல்ல சிந்தனைகளுக்கு நம்முடைய கவனத்தைத் திருப்புவதென்பதாகும். இவ்வாறாக நம்முடைய தவறுகளின் வேண்டுதல்களைக் கேட்காதபடிக்கு அல்லது குறைவாகவே கேட்கும்படிக்கு நம்முடைய காதுகளில் உருவகமான பஞ்சை வைத்துக் கொள்வோம். நாம் மற்ற நல்ல காரியங்களைக் குறித்து சிந்திக்கும் போது, நம்முடைய தவறுகளின் வேண்டுதல்கள் காதில் விழாதபடிக்குத் தூரமாக விரட்டுவோம். நாம் விசேஷமாகத் தூண்டப்படும் நேரங்களில் நம்முடைய தவறுகளுக்கு இடங் கொடாமலிருப்பதற்கு இந்த செயல்முறை விசேஷமாக உதவும்.

*14.* திறமையுள்ள மன தத்துவ அறிஞனான சாத்தான் நம்முடைய பெலவீனங்களையும், நம்முடைய குணநலன்களையும் முழுமையாக அறிந்திருக்கிறான். இந்த தவறுகளுக்கு இடங்கொடுக்கும்படி நம்முடைய

மனதைத் தூண்டுவதற்கு உள்ளான மற்றும் புறம்பான கவர்ச்சிகளின் மூலம் திரும்பத் திரும்பச் சில யோசனைகளை நமக்குக் கொடுப்பான். சில நேரங்களில் கிட்டத்தட்ட இடைவிடாமல் இவ்வித கவர்ச்சியான யோசனைகளை நம்முடைய மனதில் தூண்டிக் கொண்டே இருப்பான். நம்மை விசேஷமாகத் தூண்டக் கூடிய சூழ்நிலைகளுக்குள் செல்ல நம்மை நாமே அனுமதித்தால், அநேகமாக அவன் வைத்த கண்ணிக்குள் விழுவோம்.

*15.* நம்முடைய நிலை இப்படிப்பட்ட ஒன்றாக இருந்தால், அதுவும் நம்மை நெருக்கி ஏவுகிற தவறுகள் சம்பந்தமாக அவ்வாறிருந்தால், அந்த தவறைத் தூண்டக் கூடிய யோசனைகளிலிருந்தும் சூழ்நிலைகளிலிருந்தும் நம்முடைய கவனத்தைத் திருப்பி, ஏதேனுமொரு நல்ல காரியத்தின்மேல் நம்முடைய கவனத்தை நிலை நிறுத்துவதென்பது நம்மை சிறப்பாகப் பாதுகாக்கும். இவ்வாறாகத் தீமை செய்ய நம்மைக் கவரக் கூடிய யோசனைகளிலிருந்து நம்முடைய கவனத்தை நீக்கி, தீமை செய்ய நம்மைக் கவராத யோசனைகளுக்கு நம்முடைய கவனத்தைத் திருப்புவதின் மூலம், தவறு செய்யத் தூண்டும் சிந்தனைகளை நம்முடைய மனதிலிருந்து அகற்றுவோம். ஏனென்றால் நம்மைக் கவரக் கூடிய யோசனைகளை நம்முடைய மனதில் திணிக்க நாம் சாத்தானுக்குத் தாராளமாக இடங் கொடுத்தால், அவன் நம்மை நிச்சயமாக விழச் செய்வான். ஆனால் அவன் அளிக்கும் தீமையான யோசனைகளிலிருந்து நம்முடைய கவனத்தை நீக்கி நல்ல சிந்தனைகளுக்குத் திருப்பும்போது, நாம் விழுந்து விடாதபடி பாதுகாக்கப்படுவோம். இதுவே பிசாசானவனுக்கு இடங் கொடாமலிருப்பதாகும்.

*16.* அவ்வாறு செய்யும்போது, "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" என்ற கட்டளையை நாம் நிறைவேற்றுகிறோம். காகங்கள் நம்முடைய தலையின்மேல் பறப்பதை நம்மால் தடை செய்ய முடியாததைப் போல், நம்முடைய மனதிற்குள் கவர்ச்சியான யோசனைகளைத் திணிக்க தொடங்குவதிலிருந்து நாம் சாத்தானை தடுக்க முடியாது. ஆனால் அந்த காகங்கள் தலையில் கூடு கட்டுவதை நாம் தடுக்கக் கூடியதாக இருப்பதைப் போல், அவன் அந்த யோசனைகளை நம்முடைய மனதில் தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பதை நாம் தடுக்க முடியும். அவ்வித யோசனைகளிலிருந்து நம்முடைய கவனத்தை நீக்கி, நல்ல சிந்தனைகளுக்கு அதைத் திருப்புவதென்பது இதைச் செய்வதற்கான நல்ல வழியாகும்.

*17.* மேலும் இந்த செயல்முறையைப் பயன்படுத்துவதும் எளிதான ஒன்றாகும். ஏனென்றால் ஏராளமான நல்ல சிந்தனைகள் இருக்கின்றன. தீமையானவைகளிலிருந்து நம்முடைய கவனத்தை நீக்கி இந்த நல்ல சிந்தனைகளுக்கு அதை நாம் திருப்பக் கூடும். வேதாகமத்தில் ஏழு வகையான சிந்தனையின் தொகுப்புகள் இருக்கின்றன: *(1)* கோட்பாடுகள், *(2)* கற்பனைகள்,*(3)* வாக்குத்தத்தங்கள், *(4)* புத்திமதிகள், *(5)* தீர்க்கதரிசனங்கள், *(6)* சரித்திரங்கள், *(7)* அடையாளங்கள். இவைகள் ஒவ்வொன்றிலும் ஏராளமான சிந்தனைகள் இருக்கின்றன. சாத்தான் புகுத்தும் சிந்தனைகளிலிருந்து தப்பிச் சென்று, இந்த நல்ல சிந்தனைகளினிடத்திற்கு ஓடிப் போகக் கூடும். ஆகையால் இந்த நல்ல சிந்தனைகளிடம் செல்ல முயலுவதின் மூலம், நாம் பிசாசானவனுக்கு இடங் கொடாமலிருப்போமாக.

## தீமையைத் தவிர்ப்பது

*18.* மேலே சொல்லப்பட்ட செயல்முறைக்கு மிகவும் ஒத்த மற்றொரு செயல்முறை தீமையைத் தவிர்ப்பதென்பதாகும். தீமையான சிந்தனைகளிலிருந்து நம்முடைய கவனத்தை நீக்கி, நல்ல சிந்தனைகளுக்குத் திருப்புவதின் மூலம் ஓரளவிற்குத் தீமையைத் தவிர்க்கிறோம். ஆனால் தீமையைத் தவிர்ப்பது என்ற செயல்முறையானது, தீமையான யோசனைகளை நம்மிடமிருந்து அகற்றுவது மட்டுமல்ல, பாவத்திற்கேதுவான எல்லா சூழ்நிலைகளிலிருந்தும், விசேஷமாக நம்மை நெருக்கி ஏவுகிற பாவத்திற்கேதுவான எல்லா சூழ்நிலைகளையும் நம்மிடமிருந்து அகற்றுவதையும் அர்த்தப்படுத்தும். இந்த செயல்முறை பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்துகிறது: நம்முடைய பெலவீனங்களின்மேல் கிரியை செய்வதினால், நம்மைப் பாவத்திற்குள் விழச் செய்யக் கூடிய சூழ்நிலைகளையும், நபர்களையும், காரியங்களையும் விட்டுச் சென்று, அவைகளிலிருந்து தூரமாகவே இருக்க வேண்டும்.

*19.* குடி பழக்கமுள்ள ஒருவன், அவனுடைய பெலவீனம் தூண்டப்படக்கூடிய மதுபான கடைகளிலிருந்தும், மற்ற இடங்களிலிருந்தும், தோழர்களிடமிருந்தும், கூட்டங்களிலிருந்தும் தூரமாக இருக்க வேண்டும். இச்சிக்கும் இயல்புடைய ஒரு நபர், அவனுடைய பெலவீனத்திற்கு இடங்கொடுக்க அவனைக் கவரக்கூடிய இடங்களிலிருந்தும், சூழ்நிலைகளிலிருந்தும், நபர்களிலிருந்தும் தூரமாக இருக்க வேண்டும். போஜன பிரியனானவன், அவனுடைய ஆகார விருப்பத்தை மிகுதியாகத் திருப்தி செய்யக்கூடிய விருந்துகளிலிருந்து தூரமாக இருக்க வேண்டும். சண்டை செய்யும் இயல்புடைய ஒரு நபர், அவனுடைய சண்டை செய்யும் குணத்தைத் தூண்டக்கூடிய எல்லா நபர்களையும் சூழ்நிலைகளையும் தவிர்க்க வேண்டும். பகைமையுள்ள ஒரு நபர் அவனுடைய எதிரிகளுக்குத் தூரமாய் இருக்க வேண்டும். அதிகாரத்தைப் பற்றிக் கொண்டு, இறுமாப்பாய் ஆளும் இயல்புடைய ஒருவன், தன்னை உயர்த்தவும் அதிகாரத்தை அபகரிக்கவும் அவனைத் தூண்டக்கூடிய எல்லா சூழ்நிலைகளையும் தவிர்க்க வேண்டும். சோம்பேறியானவன் அவனுடைய சோம்பலுக்கு சாதகமான எல்லா சூழ்நிலைகளையும் தவிர்த்து அவைகளுக்குத் தூரமாயிருக்க வேண்டும். கோழைத்தனமுள்ள ஒருவன் அபாயமான சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டும். வஞ்சிக்கும் இயல்புடைய ஒருவன் வஞ்சனையிலும் மாய்மாலத்திலும் ஈடுபட அவனைத் தூண்டக்கூடிய சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டும். பேராசையுள்ள ஒருவன் பேராசையைத் தூண்டக்கூடிய சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டும்.

*20.* நாம் இவ்வாறு செய்யும்போது பல வீழ்ச்சிகளைத் தவிர்க்கக் கூடும். விசேஷமாக நாம் இந்த செயல்முறையை அப்பியாசிப்பதற்குக் கூடுதலாக, விழித்திருத்தலையும், சுய பரிசோதனையையும், ஜெபத்தையும் செய்யும்போது நிச்சயமாக அவைகளைத் தவிர்க்கக் கூடும். இதற்கு முன் சொல்லப்பட்ட செயல்முறையும் இன்னும் விசேஷமாக இந்த செயல்முறையும் தவறு செய்ய நம்மைத் தூண்டும் சூழ்நிலைகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அவ்வித சூழ்நிலைகளில் நாம் அதிகமாகவோ குறைவாகவோ விழக்கூடிய அபாயம் இருக்கிறது. இதற்குமுன் சொல்லப்பட்ட செயல்முறையும் ஓரளவிற்கு இதைச் செய்யும். ஆகையால் நாமெல்லா

ரும் இந்த செயல்முறையை அப்பியாசிப்போமாக. அதைச் செய்வதின் மூலம் நாம் சாலொமோன் கொடுத்த பல புத்திமதிகளை நிறைவேற்றுவோம். விசேஷமாக *நீதி.4:14,15* வசனங்களில் கொடுக்கப்பட்டவைகளை நிறைவேற்றுவோம்: *"துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே; தீயோருடைய வழியில் நடவாதே. அதை வெறுத்துவிடு, அதின் வழியாய்ப் போகாதே; அதை விட்டு விலகிக் கடந்துபோ."*

## தீமையை அருவருப்பது

*21.* நம்முடைய பெரிய மற்றும் சிறிய நரிகளை மேற்கொள்வதற்குரிய முதல் செயல்முறையாகிய "தீமையிலிருந்து நம்முடைய பற்றுதல்களைப் பிரிப்பது" என்பதுடன் நெருங்கிய தொடர்புடைய மற்றொரு செயல்முறை தீமையை அருவருப்பதென்பதாகும். முந்தைய செயல்முறை (தீமையிலிருந்து பற்றுதல்களைப் பிரிப்பது), நம்முடைய தவறுகள் பற்றிக் கொள்கிற காரியங்களுக்கான நம்முடைய விருப்பத்தை நம்மிடமிருந்து நீக்கும். அதன் மூலம் நம்மை அந்த காரியங்கள் சம்பந்தமாக உணர்வற்றவர்களாகவும் அக்கறையற்றவர்களாகவும் ஆக்கும். ஆனால் அருவருப்பதென்பது, அதற்கும் மேலாகச் சென்று பின்வரும் காரியங்களைச் செய்யும்: *(1)* தீமையை நோக்கி மனதிலும் இருதயத்திலும் சித்தத்திலும் எதிர்ப்புணர்ச்சி கொள்ளும், *(2)* தீமையை நோக்கி நீதியான கோபத்தினால் நம்மை நிரப்பும், *(3)* தீமையை உறுதியாக வெறுக்கச் செய்யும். அதினால் நம்முடைய இருத்தலே தீமையைக் கண்டித்து அதற்கெதிராகக் கடும் வெறுப்பை உணரும். அருவருப்பதென்பது ஒரு நபர், ஒரு கொள்கை அல்லது ஒரு காரியத்திற்கு விரோதமாக மனுஷீக மனம் இருதயம் மற்றும் சித்தம் உணரக் கூடிய மிக அதிக உச்ச அளவான கண்டனத்தையும் கடும் வெறுப்பையும் வெளிப்படுத்துகிற ஒன்றாகும். அது உச்சநிலைக்குப் பெருக்கமடைந்த வெறுப்பாகும்.

*22.* ஆனால் நாம் இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிற தீமையை அருவருப்பதென்பது அநீதியான ஒரு காரியமாக இருக்கக் கூடாது. அதாவது தீமையான நோக்கங்களின் அடிப்படையில் இருக்கக் கூடாது. அது நல்ல கோட்பாடுகளில் மனமகிழ்ச்சியினால் உண்டான அருவருப்பாக இருக்க வேண்டும். மேலும் நன்மையின்மேல் இவ்வித மன மகிழ்ச்சி எந்த அளவிற்கு அதிகமாக இருக்கிறதோ, அதே அளவிற்குத் தீமையின் மேல் வெறுப்பு இருக்கும். வேதாகமம் பின்வரும் வசனங்களில் இந்த கருத்தை வலியுறுத்துகிறது: *சங். 97: 10; 101: 3; 119: 104, 128, 163; 139: 21, 22;* ரோம. *12: 9.* இது நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு பண்பாக இருக்கிறது.

*23.* இது சம்பந்தப்பட்ட வேதாகம கருத்துக்களை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் சித்தத்திலும் வைத்துக் கொள்வதின் மூலம் நாம் அதை அபிவிருத்தி செய்து கொள்ளக் கூடும். அந்த கருத்துக்களாவன :தீமையின் தன்மையும் விளைவுகளும் தவறானவைகளாக இருக்கின்றன. அது தேவனை எதிர்த்துச் செய்யப்படும் கலகமாகவும் அவருக்கு அளிக்கப்படும் அவமதிப்பாகவும் இருக்கிறது. அது அவருடைய சர்வாதிகாரத்தை எதிர்த்து அதை மறுதலிக்கிறது. அது அவருக்குக் கீழ்ப்படிய மறுத்து அவரை வெறுக்கிறது. அது நம்முடைய கர்த்தருக்கு வார்த்தைகளில் சொல்ல முடியாத பாடுகளையும், அவமானம் நிறைந்த மரணத்தையும் கொண்டு வந்தது. அது நம்மை இழிவாக்குகிறது. அதினால் நம்மேல் தேவன் சினமடைகிறார். அது நம்முடைய கர்த்தருக்கு வேதனையை உண்டாக்குகிறது. சகோதரர்களுக்குத் தீங்கு விளைவிக்கிறது. அது மனுகுலத்தின் மேல் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத சீர்கேட்டையும், துக்கத்தையும், பாடுகளையும் கொண்டு வருகிறது. மேலும் மனுகுலத்தை மரண செயல்முறையின் மூலம் கல்லறைக்குக் கொண்டு செல்கிறது. விழுந்து போன மனுஷர்கள் மற்றும் தேவ தூதர்களின் மத்தியிலுள்ள எல்லா பொல்லாப்புக்கும் அது காரணமாக இருக்கிறது. அது சாபத்தினால் வந்த எல்லா துன்பத்தையும் கொண்டு வந்தது. அந்த துன்பங்களின் உச்சநிலையாக, மனுகுலத்தின் மேல் வந்த உபத்திரவ காலத்தின் பாடுகளையும் கொண்டு வந்தது. அதை மேற்கொள்ள நாடுபவர்களுக்கு அதைக் கடினமான ஒன்றாக ஆக்குகிறது. மேலும் அவர்கள் அதை மேற்கொள்ள நாடும் போது, அவர்களைக் காயப்படுத்துகிறது. அது பிசாசானவனுக்கும், மனந்திரும்பாத அவனுடைய தூதர்களுக்கும், பொல்லாத மனுஷருக்கும் மகிழ்ச்சி உண்டாக்குகிறது.

*24.* நாம் இவ்வித சிந்தனைகளை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் சித்தத்திலும் வைத்துக் கொள்ளும்போது, அது தீமையைப் பற்றிய அருவருப்பை நம்மில் தொடர்ந்து அதிகமதிகமாகத் தூண்டிக் கொண்டிருக்கும். நாம் தீமையைக் குறித்து இவ்விதமான அருவருப்பை அபிவிருத்தி செய்து கொண்டால், "திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழி நரிகளையும் சிறு நரிகளையும் நமக்காகப் பிடித்துக் கொள்ள" அது நமக்கு உதவும். ஏனென்றால் நாம் அருவருக்கிற ஒரு காரியத்தில் விருப்பத்துடன் ஈடுபட மாட்டோம்.

## தவறுகளை எதிர்ப்பது

*25.* நாம் தீமையை இவ்வாறு அருவருக்கும் போது, அது இயல்பாகவே நம்முடைய பெரிய மற்றும் சிறிய நரிகளைப் பிடிப்பதற்குரிய அடுத்த செயல்முறைக்கு நம்மை கொண்டு செல்லும். அது தவறுகளை எதிர்ப்பதென்பதாகும். நாம் நம்முடைய தவறுகளை மேற்கொள்வது சம்பந்தமாக முன் சொல்லப்பட்ட நான்கு செயல்முறைகளைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்கும் போது, அவைகள் ஒவ்வொன்றும் தவறுகளை எதிர்க்க நமக்கு எவ்வாறு திராணி அளிக்கின்றன என்பதை எளிதாகப் புரிந்து கொள்வோம். அந்த செயல்முறைகளைக் குறிப்பிடும்போதே நாம் அதைப் புரிந்து கொள்ளக்கூடும்: *(1)* நம்முடைய தவறுகளிலிருந்தும் அவைகளுடைய இலக்குகளிலிருந்தும் நம்முடைய பற்றுதல்களைப் பிரிப்பது, *(2)* நம்முடைய தவறுகள் கிரியை செய்யும்படி அவைகளைத் தூண்டக் கூடிய யோசனைகளிலிருந்து நம்முடைய கவனத்தைத் திருப்புவது, *(3)* அவைகள் கிரியை செய்யும்படி அவைகளைத் தூண்டக் கூடிய சூழ்நிலைகளையும் நபர்களையும் தவிர்ப்பது, *(4)* அவைகளை அருவருப்பது. விசேஷமாக இந்த நான்காம் செயல்முறை, அதாவது அவைகளை அருவருப்பதென்பது, அவைகளை எதிர்க்க நம்மைத் தூண்டும்.

*26.* அவைகளை எதிர்ப்பதென்பது, நாம் பின்பற்ற வேண்டிய சரியான போக்காகும் என்பது, அவைகளை நோக்கி நாம் எவ்வாறு செயல்பட வேண்டுமென்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிற காரியங்களிலிருந்து தெளிவாகிறது. நாம் அவைகளை எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டுமென்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. இந்த தவறுகளும், அவைகள் சம்பந்தப்பட்ட சிந்தனைகளும் சாத்தானின் பல போர்

வீரர்களாக இருக்கின்றன. அவன் அவைகளை நேரடியாகத் தூண்டுவதின் மூலமும், நம்முடைய மாம்சம் மற்றும் உலகத்தின் ஒத்துழைப்பினால் அவைகளைத் தூண்டுவதின் மூலமும் அவைகளை நமக்கெதிராகக் கையாளுகிறான். இதற்கெதிர் மாறாக, நம்முடைய சத்திய சிந்தனைகள், பற்றுதல்கள் மற்றும் குணநலன்கள் நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் தலைமையின் கீழ் யுத்தம் செய்கிற போர் வீரர்களாக இருக்கின்றன. சாத்தான், மாம்சம் மற்றும் உலகத்தின் போர் வீரர்களுக்கெதிராக யுத்தம் செய்ய அவைகளைத் தூண்டுவதற்கு நம்முடைய கர்த்தர் தேவ வார்த்தையையும், பரிசுத்த ஆவியையும் உபயோகிக்கிறார். நம்முடைய சத்திய சிந்தனைகள், பற்றுதல்கள் மற்றும் குணநலன்கள் இந்த யுத்தத்தில் தேவனுடைய பட்சத்தில் படையில் சேர்ந்திருக்கின்றன. மேலும் சாத்தானுடைய அதிகாரத்தின் கீழுள்ள சத்துருக்களை முடிவு பரியந்தம் கடும் முயற்சியுடன் போராட தீர்மானித்திருக்கின்றன.

*27.* நம்முடைய தவறுகளை எதிர்த்துப் போராடுவதென்பது நம்முடைய தொடர்ச்சியான மனநிலையாகவும் வேலையாகவும் இருக்க வேண்டும். நாம் அவைகளை எதிர் கொள்ளும் போது, அவைகள் அவைகளுடைய பட்டயத்தினால் நம்மை குத்த முயலும்போது, நாம் நம்முடைய பட்டயமாகிய தேவ வார்த்தையைக் கொண்டு நம்முடைய தற்பாதுகாப்புக்காக அவைகளைத் தடுத்துத் தவிர்க்க வேண்டும். மேலும் நம்முடைய சர்வாயுதவர்க்கமாகிய நம்பிக்கை என்னும் தலைச்சீராவையும், நீதி என்னும் மார்க்கவசத்தையும், அன்பென்னும் கால்களைப் பாதுகாக்கும் கவசத்தையும் உபயோகித்து அவைகளுடைய தாக்குதலை எதிர்க்க வேண்டும். மேலும் அவைகள் எய்யும் அம்புகளை நம்முடைய விசுவாசமென்னும் கேடகத்தினால் தடுத்து, அவைகளைப் பயனற்றவைகளாக ஆக்க வேண்டும்.

*28.* மேலும் வலிய போராடும் முறையில், நம்முடைய ஆவியின் பட்டயமாகிய தேவ வார்த்தையைக் கொண்டு, அவைகளுடைய உருவகமான சரீரங்களில் கவசத்தினால் மூடப்படாத பகுதிகளை உருவக்குத்த வேண்டும். இறுதியாகத் தீமையின் சரீரத்திலுள்ள ஏதேனுமொரு உயிராதார உறுப்பை உருவக்குத்தி, அதைக் கொல்ல வேண்டும். அதற்கிடையில் நாம் வலிய போராடி அவைகளைக் காயப்படுத்தி; மோசமாகச் சேதப்படுத்தி, சிறைப்படுத்த வேண்டும். இறுதியாகச் சற்றுமுன் குறிப்பிடப்பட்டதைப் போல் அவைகளை முற்றிலும் கொல்லும் வகையில் உருவ குத்த வேண்டும். நம்மேல் ஆதிக்கம் செய்ய இந்த தவறுகள் சற்று அசைந்தாலும் கூட, நாம் அவைகளுக்கு இடங் கொடுக்கவோ அல்லது அவைகளை எதிர்க்காமலிருக்கவோ கூடாது. மாறாக அவைகளை உடனடியாக எதிர்த்து தற்பாதுகாத்துக் கொள்ளும் விதத்திலும், வலிய போராடும் விதத்திலும் யுத்தம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்போது மட்டுமே நாம் இறுதியாக ஜெயங் கொள்ளக் கூடும்.

## நம்முடைய குணநலன்களைக் கொண்டு நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்துவது

*29.* "திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறு நரிகளையும் நமக்காகப் பிடித்துக் கொள்வதற்கு" நாம் உபயோகிக்க வேண்டிய ஆறாம் செயல்முறையும் இருக்கிறது. அது இவ்வாறாயிருக்கிறது: நம்முடைய குணநலன்களைக் கொண்டு, விசேஷமாக நம்முடைய உயர்நிலை முதன்மையான குணநலன்களைக் கொண்டு இந்த தவறுகளைக் கட்டுப்படுத்துவதென்பதாகும். நாம் செய்யும் போராட்டத்தின் இந்த பகுதிக்குரிய முக்கியமான செயல்முறைகளில் இது ஒன்றாகும் என்பதில் சந்தேகமில்லை. நாங்கள் சற்றுமுன் குறிப்பிட்டதைப் போல் இந்த யுத்தத்தில் ஜெயங்கொள்ள விசேஷமாக உதவும் குணநலன்கள் உயர்நிலை முதன்மை குணநலன்களாகும். அவைகளாவன: விசுவாசம், நம்பிக்கை, சுயகட்டுப்பாடு, பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் தியாக அன்பு. நம்முடைய தாழ்நிலை முதன்மை குணநலன்களில் சில குணநலன்களும் அதற்கு உதவும். விசேஷமாக நம்முடைய சண்டை செய்யும் குணம் மற்றும் வலிய போராடும் குணம் அதற்கு உதவும். மேலும் அதற்கடுத்த நிலையில், நம்முடைய சத்துருக்களின் தாக்குதல்களுக்கு எதிராக நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு நம்முடைய எச்சரிக்கையோடு இருக்கும் குணம் மற்றும் அவைகளை எதிர்கொள்வதற்கு நம்முடைய சாதுரியம் என்பவைகளும் உதவும். கீழ்ப்படிதல், வைராக்கியம், போற்றிதுதிக்கும் பயபக்தி போன்ற நம்முடைய மூன்றாம் நிலை குணநலன்களும் நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்த நமக்கு உதவும்.

*30.* இந்த செயல்முறையை நடைமுறைப்படுத்துவதை விளக்குகிற சில எடுத்துக்காட்டுகளை இப்பொழுது பார்ப்போம்: கோழைத்தனமென்பது நம்மிடமுள்ள தவறென்று நாம் கருதுவோம். அதைக் கட்டுப்படுத்தும் கருவிகளாக நாம் நம்முடைய உயர்நிலை முதன்மை குணநலன்களை எவ்வாறு உபயோகிக்கக் கூடும்? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: விசுவாசம், நம்பிக்கை, சுயகட்டுப்பாடு, பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், தியாக அன்பு ஆகியவைகளைப் பற்றிய சிந்தனைகளை நம்முடைய கோழைத்தனத்திற்கெதிராக உபயோகிப்பதின் மூலம் நாம் அதைச் செய்யக் கூடும்.

*31.* இவ்வாறாக நாம் பின்வரும் சிந்தனைகளை நம்முடைய இருதயத்திலும் மனதிலும் கொண்டு, நம்முடைய விசுவாசத்தைத் தூண்ட அவைகளை உபயோகிக்கும்போது அது நம்முடைய கோழைத்தனத்தைக் கட்டுப்படுத்தும்: *(1)* தேவன் மற்றும் யெஷுஆ நம் பட்சத்திலிருக்கிறார்கள், மேலும் நம்முடைய எதிராளிகள் அனைவரையும் அழிக்கவும் நம்மை அபாயத்திலிருந்து விடுவிக்கவும் அவர்கள் விருப்பமுள்ளவர்களாகவும் வல்லமையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். *(2)* நம்முடைய போராயுதங்கள் நம்முடைய எதிராளிகளின் போராயுதங்களைவிட அதிக வல்லமையுள்ளவைகளாக இருக்கின்றன *(3)* விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களிலுள்ள பரிசுத்தாவியானது அவர்களுடைய மாம்சத்தை விட அதிக வல்லமையுள்ளதாயிருக்கிறது. *(4)* நம்முடைய சண்டைகளிலும் அபாயங்களிலும் நமக்கு உதவுகிற உடன் போர் வீரர்கள் நம்மோடிருக்கிறார்கள். *(5)* நம்முடைய சத்துருக்களையும் அபாயங்களையும் எதிர்ப்பதற்கு நமக்குத் தேவையான எல்லா பலத்தையும் உதவியையும் தேவ வார்த்தை மற்றும் பரிபாலனம் நமக்களிக்கும் *(6)* நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாகும். நம்முடைய உதவியாளர்களுடன் ஒப்பிடும் போது நம்முடைய சத்துருக்கள் பெலவீனர்களாக இருக்கிறார்கள், *(7)* பல நேரங்களில் நம்முடைய அபாயங்கள் நாம் கற்பனை செய்கிற காரியங்களாக மட்டுமே இருக்கின்றன. மேலும் அவைகள் நம்மை மேற்கொள்ளுமளவிற்கு வல்லமையுள்ளவைகளாக இராதபடிக்கு அவைகள் எப்போதுமே கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்படுகின்றன.

இவ்வித சிந்தனைகளை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் பற்றிக் கொள்ளும்போது நம்முடைய பயத்தைக் கட்டுப்படுத்தும் விதத்தில் செயல்பட அவைகள் நம்முடைய விசுவாசத்தைத் தூண்டும்.

*32.* பயத்தைக் கட்டுப்படுத்த நமக்குத் திராணி அளிப்பதற்கு நாம் நம்பிக்கையை எவ்வாறு உபயோகிக் கக் கூடும்? நம்பிக்கை நிறைந்த சிந்தனைகளை நம் முடைய இருதயத்திலும் மனதிலும் வைத்துக் கொண்டு, அவைகளை உபயோகித்து, பயத்திற்கெதிராகச் செயல் படும்படி நம்முடைய நம்பிக்கையைத் தூண்ட வேண்டும். அவ்வித சிந்தனைகளில் சில சிந்தனைகள் இவ்வாறா யிருக்கின்றன: *(1)* நாம் நம்முடைய போராட்டத்தில் தேவ னுடனும் கர்த்தராகிய யெஷுஆவுடனும் விசுவாச உண்மைத்துவத்துடன் ஒத்துழைக்கும் போது; அவர்கள் நிச்சயமாக நமக்கு வெற்றியை அளிப்பார்கள். *(2)* விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களுக்கு வெற்றி நிச் சயம். *(3)* நம்முடைய யுத்தத்தில் நாம் அடையும் வெற்றி யைத் தொடர்ந்து ஒரு மகிமையான விளைவு வரும். *(4)* அந்த விளைவானது, அந்த வெற்றியை அடைய நாம் செய்த முயற்சிகளை விட மிக அதிகமாக நமக்கு ஈடு செய்யும். *(5)* நம்முடைய போராயுதங்களை நாம் விசுவாச உண்மைத்துவத்துடன் உபயோகிக்கும் போது, இறுதியாக வெற்றி அடைவோம் என்பதற்கு அது உத்தரவாதமாகும். *(6)* இறுதியாகச் சத்தியம் நீதி மற்றும் பரிசுத்தத்தின் நோக்கம் நிச்சயமாக ஜெயங் கொள்ளும். நம்முடைய சித்தத்தின் வல்லமையை உபயோகித்து, இவ்வித சிந்தனைகளை நம்முடைய இருதயத்திலும் மனதிலும் பற்றிக் கொண்டு, அவைகளுக்கு இணக்கமாகச் செயல்படும்போது, நம்முடைய பெலத்தைப் பெரிதள வில் கட்டுப்படுத்தும் நம்பிக்கையை அது நம்மில் தூண்டிவிடும். நம்முடைய தவறுகளுக்கெதிரான கட்டுப் பாடுகளாக உயர்நிலை முதன்மை குணநலன்களின் செயல்பாட்டின் மூலம் பயமென்ற தவறு எவ்வாறு கட்டுப்படுத்தப்படக் கூடும் என்பதைத் தெளிவாக்கு வதற்கு, பயத்தைக் கட்டுப்படுத்த உயர்நிலை முதன்மை குணநலன்களை உபயோகிப்பதின் இந்த இரு எடுத்துக்காட்டுகள் போதுமானவைகளாக இருக்கின்றன.

*33.* மற்ற உயர்நிலை முதன்மை குணநலன்களை உபயோகித்து மற்றொரு தவறைக் கட்டுப்படுத்துவதற்கு இதே முறையை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பதை இப்பொழுது விளக்குவோம். நாம் கட்டுப் படுத்த வேண்டிய தவறு சண்டை செய்யும் குணமென்று கருதுவோம். அது ஒருவனைக் கோபமடைகிறவனாகவும் சண்டை செய்யும் குணமுடையவனாகவும், சண்டை செய்கிறவனாகவும் ஆக்கும். அதற்கெதிரிடையான பண்பு நீடிய சகிப்பு மற்றும் சமாதானமென்பதாகும். சுயகட்டுப்பாடு என்ற உயர்நிலை முதன்மை குணநலத்தை உபயோகித்து இந்த தவறைக் கட்டுப்படுத்த நாம் விரும்புவதாகக் கருதுவோம். நாம் அதை எவ்வாறு செய்யக்கூடும்?

*34.* நம்முடைய சித்தத்தின் வல்லமையைக் கொண்டு, சுயகட்டுப்பாடு சம்பந்தப்பட்ட சிந்தனைகளை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் வைத்துக் கொள்வதின் மூலம் அதைச் செய்யக் கூடும். மேலும் நம்முடைய சண்டை செய்யும் குணம் சம்பந்தமாகவும், அதின் விளைவாக உண்டாகும் தவறுகள் சம்பந்தமாகவும் இந்த சிந்தனைகள் நம்மை ஆண்டு கொள்ளும்படி செய்ய வேண்டும். அவ்வித சிந்தனைகளில் சில சிந்தனைகள் இவ்வாறாயிருக்கின்றன: *(1)* தேவன் மற்றும் கிறிஸ்து சுயகட்டுப்பாட்டை அப்பியாசிக்கிறார்கள், *(2)* நாமும் அதை அப்பியாசிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பு கிறார்கள், *(3)* சுயகட்டுப்பாட்டை அப்பியாசிப்பதென்பது இயல்பாகவும், அதின் விளைவுகளின் காரணமாகவும் நன்மையான ஒன்றாகும், *(4)* சண்டை செய்யும் குணத்தை யும், அதின் விளைவாக வரும் கோபத்தையும் சண்டை களையும் சச்சரவையும் கட்டுப்படுத்த சுயகட்டுப்பாடு திறமையுள்ள ஒரு பண்பாகும், *(5)* இவைகளைக் கட்டுப் படுத்தாமலிருப்பதென்பது, ஜெயங் கொள்வதற்கு நாம் செய்யும் முயற்சிகளை அழிக்கும், நம்முடைய ஊழியத் தைக் கெடுக்கும், நம்முடைய பிரயாசங்களைத் தோல்வி யுறச் செய்யும். நம்முடைய சித்தத்தின் வல்லமையைக் கொண்டு, இவ்வித சிந்தனைகளை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் வைத்துக் கொண்டு, அவைகளை அப்பியாசிக்கும்போது, அவைகள் சுயகட்டுப்பாட்டின் செயல்பாட்டைத் தூண்டும். அது நம்முடைய சண்டை செய்யும் குணத்தை அதிகமதிகமாகக் கட்டுப்படுத்தி, இறுதியாக நம்மை ஜெயங் கொள்ள செய்யும்.

*35.* நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்தும் செயல்முறையை உபயோகித்து, பொறுமை என்பது நம் முடைய சண்டை செய்யும் குணத்தையும், அதின் விளைவாக வரும் கோபம், சண்டைகள், சச்சரவு ஆகிய வற்றை எவ்வாறு கட்டுப்படுத்தும் என்பதைப் பார்ப் போம்: நம்மைக் கட்டுப்படுத்தும்படி, நம்முடைய சண்டை செய்யும் குணம் செய்யும் முயற்சிகளில், அதைப் பற்றிப் பிடித்து, அதை அடக்கி வைக்கும்படி பொறுமையைத் தூண்டுவதின் மூலம், இது செய்யப்படும். இந்த இரு செயல்களைச் செய்யும்படி நம்முடைய சித்தம் பொறுமை யைத் தூண்டும். அதாவது நம்முடைய சித்தம் பொறு மையை உண்டாக்கி, பொறுமையைத் தூண்டும் சிந்தனை களைப் பற்றிக் கொண்டு, அவைகளை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் உறுதியாகப் பதியச் செய்து, அதற்கு இணக்கமாகக் கிரியை செய்யும்படி பொறுமை யைத் தூண்டும்.

*36.* மற்ற காரியங்களுடன், இவ்வித பொறு மையை அபிவிருத்தி செய்து, அதைத் தூண்டும் சிந்தனைகள் இவ்வாறாக இருக்கின்றன: *(1)* தேவ னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவன் மற்றும் கிறிஸ்து மிக அதிக பொறுமையை அப்பியாசிக் கிறார்கள், *(2)* நாம் அதை அபிவிருத்தி செய்து கொண்டு அப்பியாசிக்க வேண்டுமென்பதில் அவர்கள் பிரியமா யிருக்கிறார்கள், *(3)* அவர்களிலுள்ள பொறுமையினால் அவர்கள் அவர்களுடைய சண்டை செய்யும் குணத்தை யும், அதின் விளைவாக வரக் கூடிய தவறுகளையும் தடுக்கும்படி அந்த குணத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள், *(4)* இந்த விஷயத்தில் நாம் அவர்களுடைய முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்று அவர்கள் விரும்பு கிறார்கள், *(5)* பொறுமை இவ்வித கட்டுப்பாட்டை நிச்சய மாக அப்பியாசிக்கும், *(6)* இந்த நோக்கத்தை நிறைவேற்று வதற்குப் பொறுமையின் இயல்பும் விளைவுகளும் நன்மையானவைகளாக இருக்கின்றன, *(7)* நம்மை இறுதி யாக ஜெயங் கொள்ளச் செய்யும் இரு பண்புகளில் பொறுமை ஒன்றாகும் (இந்த அலுவல் வேலையில் பொறுமையோடு இணைத்து கிரியை செய்யும் மற்றொரு பண்பு விசுவாச உண்மைத்துவம் என்பதாகும்), *(8)* பொறுமையை வளர்த்துக் கொள்வது நமக்கொரு நேர்த்தி யான குணத்தை அளிக்கும். அந்த குணம் சண்டை செய்யும் குணத்தைக் கட்டுப்படுத்துவதில் நம்மைச் செழிப்படையச் செய்யும். நம்முடைய சித்தத்தின் பலத்தை உபயோகித்து, இவ்வித சிந்தனைகளை நம் முடைய மனதிலும் இருதயத்திலும் உறுதியாகவும்

விடாமுயற்சியுடனும் பற்றிக் கொண்டு இந்த தவறை எதிர்த்து கிரியை செய்யும்படி பொறுமையைத் தூண்ட அந்த சிந்தனைகளை உபயோகிக்கும்போது, கொஞ்சம் கொஞ்சமாகவும், அதிகமதிகமாகவும் நம்முடைய சண்டை செய்யும் குணத்தைக் கட்டுப்படுத்த இந்த சிந்தனைகள் பொறுமைக்கு நிச்சயமாகத் திராணி அளிக்கும்.

*37.* இந்த செயல்முறையை மேலும் விளக்கு வதற்கு, நாம் மற்றொரு செயல்முறையைக் கருத்தில் கொள்வோம். தவறு பெருமை என்பது நம்மிலுள்ள தவறு என்று கருதுவோம். நிச்சயமாக அதைக் கட்டுப் படுத்த நாம் விரும்புவோம். மேலும் தேவபக்தி என்ற குணநலத்தின் மூலம் அதைக் கட்டுப்படுத்த நாம் விரும்புவதாகக் கருதுவோம். தேவ பக்தி என்பது முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமா வோடும், முழு பெலத்தோடும் தேவனுக்கும் கிறிஸ்து வுக்கும் செலுத்தப்படுகிற கடமை அன்பாகும். அதை உபயோகித்து பெருமையைக் கட்டுப்படுத்த நாம் எவ்வாறு செயல்படத் தொடங்க வேண்டும்? நம்முடைய சித்தத்தின் வல்லமையை உபயோகித்து, தேவன் மற்றும் கிறிஸ்துவை உயர்த்தும் சிந்தனைகளையும், அவர்கள் சம்பந்தமாக நம்மை தாழ்த்தும் சிந்தனைகளையும் நம் முடைய மனதிலும் இருதயத்திலும் பற்றிக் கொள்ள வேண்டும். மேலும் அந்த சிந்தனைகளை உபயோகித்து, நம்முடைய பெருமையைக் கட்டுப்படுத்தும்படி செயல் பட நம்முடைய தேவபக்தியைத் தூண்ட வேண்டும்.

*38.* மற்ற காரியங்களுடன், இவ்வித சிந்தனைகள் இவ்வாறாயிருக்கின்றன: *(1)* தேவன் மற்றும் கிறிஸ்து உச்ச உயர் அதிகாரமுள்ளவர்களாகவும் மாட்சிமை பொருந்தினவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் நாம் அவர்களுடைய பிரஜைகளாகவும் அற்பமானவர்களாக வும் இருக்கிறோம். *(2)* அவர்கள் தன்மையிலும், குணாம் சத்திலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும் பூரணர் களாக இருக்கிறார்கள். நாமோ அவைகளில் மிகவும் அபூரணமாக இருக்கிறோம். *(3)* நாம் தேவனுக்கு முன்பாக நிற்பதென்பது, தகுதியில்லாத நமக்கு அவர் அளிக்கும் பெரிய கிருபையினாலும், கர்த்தராகிய யெஷுஆவின் பலி புண்ணியத்தினாலும் ஊழியத்தினாலும் உண்டாகு கிறது. *(4)* நாம் என்னவாக இருக்கிறோமோ, எதையுடைய வர்களாக இருக்கிறோமோ, என்னவாக இருக்க நம் - பிக்கை கொள்கிறோமோ, எதையுடையவர்களாக இருக்க நம்பிக்கை கொள்கிறோமோ, அவைகளெல்லாம் அவர் களுடைய தாராளத்தினால் உண்டானவைகள். *(5)* நாம் மிக அதிக தேவைகளுள்ளவர்களாகவும், தவறுகளால் நிறைந்தவர்களாகவும், தவறக் கூடியவர்களாகவும், பெலவீனர்களாகவும் இருக்கிறோம்! *(6)* நாம் சுயத்தில் திருப்தி அடைவதற்கும், நம்முடைய திறமைகள் மற்றும் பலத்தை மிதமிஞ்சிய விதத்தில் சார்ந்திருப்பதற்கும், அதிகாரத்தை அபகரித்து இறுமாப்பாய் ஆளும்படி நம்மை உயர்த்துவதற்கும் உண்மையில் எந்த அடிப்படை யுமில்லை. *(7)* பெருமை தேவனை அவமதித்து அவருக்கு சினமுண்டாக்குகிறது, நமக்காகக் கிறிஸ்து செய்யும் வேலையைப் பலனற்றதாக ஆக்குகிறது, நம்மில் பரிசுத் தாவி செய்யும் வேலைகளைத் தோல்வியுறச் செய்கிறது, ஜெயங் கொள்வது சம்பந்தமாக நமக்கும் மற்றவர் களுக்கும் தீங்கு விளைவிக்கிறது. *(8)* நம்முடைய குணாம்சங்கள், சிந்தனைகள் மற்றும் கிரியைகள் மிக சிறப்பாக இருக்கும்போதும் கூட, அவைகள் அற்பமான வைகளாக இருக்கின்றன, நாம் மிக அற்பர்களாக இருக்கிறோம். நம்முடைய சித்தத்தின் வல்லமையை உபயோகித்து, நாம் இவ்வித சிந்தனைகளை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் பற்றிக் கொண்டு, நம்முடைய பெருமையைக் கட்டுப்படுத்தும்படி செயல்பட நம் முடைய தேவபக்தியைத் தூண்ட வேண்டும். அவ்வாறு செய்யும்போது அது மிதமிஞ்சிய தன்னம்பிக்கை, சுய திருப்தி மற்றும் சுயத்தை உயர்த்துதல் என்ற வடிவங் களிலுள்ள நம்முடைய பெருமையைக் கட்டுப்படுத்தும். நம்முடைய மனத்தாழ்மையை ஊக்குவிக்கும்.

*39.* அடுத்ததாக நம்மை நாம் நேசிப்பதைப் போல் பிறனை நேசிக்கும் கடமை அன்பாகிய சகோதர சிநேகத்தை, நம்முடைய பிறன் சம்பந்தமாக நாம் கொள்ளும் பெருமையைக் கட்டுப்படுத்தும் கருவியாக உபயோகிப்பதின் மூலம் இந்த செயல்முறையை மேலும் விளக்குவோம். முன்சொல்லப்பட்ட காரியங்களில் உபயோகித்த அதே கொள்கையை இதிலும் நாம் உபயோகிக்க வேண்டும். நம்முடைய பிறனுடன் நமக்கிருக்கும் பந்தத்தில், பிறனை நேசிக்கும் சிந்தனை களையும், சுயத்தைத் தாழ்த்தும் சிந்தனைகளையும் நமது மனதின் யோசனைகளில் வைத்துக் கொண்டு, அவை களின் மூலம் பிறரிடம் நாம் வைக்கும் கடமை அன்பைத் தூண்ட வேண்டும். இது நம்முடைய பிறன் சம்பந்தமாக நாம் சுயத்தில் திருப்தி அடைவதிலும், மிதமிஞ்சிய தன்னம்பிக்கை கொள்வதிலும், சுயத்தை உயர்த்துவதிலும் வெளிப்படும் பெருமையைக் கட்டுப்படுத்தும். அவ்வாறு செய்யும்போது நம்முடைய பிறன் சம்பந்தமாக நாம் பெருமையாகச் செயல்படாதபடி திறமையாக அதைத் தடுக்கும்.

*40.* மற்ற காரியங்களுடன், நம்முடைய பிறன் சம்பந்தமாக நாம் கொள்ள வேண்டிய பிறனை நேசிக்கும் சிந்தனைகளும் சுயத்தைத் தாழ்த்தும் சிந்தனைகளும் இவ்வாறாயிருக்கின்றன: *(1)* தேவன் மற்றும் கிறிஸ்து நம்முடைய பிறனிடத்தில் கடமை அன்பை அப்பியா சிக்கிறார்கள், அதில் அவர்கள் நமக்கு முன்மாதிரிகளாக இருக்கிறார்கள். *(2)* நாம் பிறனை நேசிக்க வேண்டு மென்று அவர்கள் விரும்புகிறார்கள். மேலும் நாம் அவ்வாறு செய்யும்போது அவர்கள் மகிழ்கிறார்கள் *(3)* நம்முடைய பிறன் நம்மில் காண்கிற நன்மையை மதித்துணர வேண்டுமென்று நாம் விரும்புவதைப் போல், நாம் மதித்துணர வேண்டிய அதிக நன்மை நம்முடைய பிறனிடத்திலும் இருக்கிறது. *(4)* நம்முடைய பிறன் விழுந்து போனவனாகவும், தவறுகிறவனாகவும் இருக் கிறான், ஆனால் நம்முடைய விழுந்து போன நிலையில் அவன் நம்மோடு ஒத்துணர்வு கொள்ள வேண்டுமென்று நாம் விரும்புவதைப் போல், நாமும் அவனோடு ஒத்துணர்வு கொள்ள வேண்டும். *(5)* பல நேரங்களில் நம் முடைய பிறன் சாத்தானாலும், விழுந்து போன தூதர் களாலும், மனிதர்களாலும் பெரிதும் தவறாக நடத்தப் படுகிறான். நமக்கு அதே அனுபவம் இருக்கும்போது அவன் நம்மோடு ஒத்துணர்வு கொள்ள வேண்டுமென்று நாம் விரும்புவதைப் போல் நாமும் அவனோடு ஒத் துணர்வு கொள்ள தூண்டப்பட வேண்டும். *(6)* இவ்வித மதித்துணர்வு மற்றும் ஒத்துணர்வினால், அவனுடைய தேவைகளைக் கண்டு, அவனுக்கு ஊழியஞ் செய்ய நாம் தூண்டப்பட வேண்டும். ஏனென்றால் நாம் அதே சூழ்நிலைகளில் இருக்கும் போது அவன் நமக்கு ஊழியஞ் செய்ய வேண்டுமென்று நாமும் விரும்புவோம். *(7)* நம்முடைய பிறர்களில் அநேகர் நம்மைவிட சிறந்த பண்புகளுடையவர்களாகவும் திறமைகளுடையவர் களாகவும் இருக்கிறார்கள். *(8)* நம்மைவிட குறைந்த பண்புகளும் திறமைகளும் உடையவர்களையும் கூட நாம்

கனிவாக நடத்த வேண்டும். ஏனென்றால் நாம் அவர்களுடைய நிலையிலிருந்தால், அவர்கள் நம்மைக் கனிவாக நடத்த வேண்டுமென்று நாம் விரும்புவோம். *(9)* சுயதிருப்தி, மிதமிஞ்சிய தன்னம்பிக்கை, சுயத்தை உயர்த்துதல் என்பவைகளில் வெளிப்படும் நம்முடைய பெருமையானது, மற்றவர்களுக்குத் தவறான எடுத்துக்காட்டுகளாக இருப்பதினால், அவர்களை பலமுறை சீர்கேடடையச் செய்கிறது. மற்ற நேரங்களில் அவர்களுடைய உரிமைகளைப் பறித்துக் கொள்வதின் மூலம் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும். அவர்களுக்குக் காரியங்களை கடினமாக்கும். நம்முடைய சித்தத்தின் வல்லமையை உபயோகித்து, இவ்வித சிந்தனைகளை மனதிலும் இருதயத்திலும் வைத்துக் கொண்டு நம்முடைய சகோதர சிநேகத்தைத் தூண்ட அவைகளை உபயோகிக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது; நம்முடைய பிறன் சம்பந்தமாக நமக்கிருக்கும் பெருமைக்கு விரோதமாக நம்முடைய சகோதர சிநேகம் கிரியை செய்து, பெருமையைக் கட்டுப்படுத்தும்.

*41.* ஒரு தவறைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு உயர்நிலை முதன்மை குணநலத்தை உபயோகிக்கும் செயல்முறையில் மற்றொரு உதாரணத்தைப் பார்ப்போம்: இப்பொழுது நாம் பொருளாசை என்ற தவறையும், தியாக அன்பென்ற உயர்நிலை முதன்மை குணநலத்தையும் கருத்தில் கொள்வோம். தியாக அன்பென்பது, *(1)* நல்ல கோட்பாடுகளில் மனம் மகிழும், *(2)* நல்ல கோட்பாடுகளுடன் இணக்கமாயிருக்கிறவர்களில் மனம் மகிழும், *(3)* அவர்களோடு ஒத்துணர்வான ஒருமைப்பாடு கொள்ளும், *(4)* நல்ல கோட்பாடுகளுக்கெதிராக நடத்தப்படுகிறவர்களோடு ஒத்துணர்வு கொள்ளும், *(5)* ஏதேனுமொரு விதத்தில் நல்ல கோட்பாடுகள் இல்லாதவர்களிடம் ஒத்துணர்வு அல்லது இரக்கம் கொள்ளும், *(6)* மேலும் இவ்வித மகிழ்ச்சி ஒத்துணர்வினால், நல்ல கோட்பாடுகளை முன்னேறச் செய்வதற்கு, மற்றவர்களுக்காக தன் ஜீவனைப் பலி செய்யும். இவ்வித ஒரு குணநலனானது பொருளாசையை முழுமையாகக் கட்டுப்படுத்தி, கீழ்ப்படுத்த திறமையுள்ள ஒரு குணநலனாகும்.

*42.* நாம் அதை எவ்வாறு செய்யக்கூடும்? நாம் ஏற்கனவே பார்த்ததைப் போல், நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்த மற்ற உயர்நிலை முதன்மை குணநலன்களை உபயோகித்ததைப் போலவே, இந்த குணநலனையும் உபயோகித்து திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழி நரிகளையும் சிறு நரிகளையும் நமக்காகப் பிடித்துக் கொள்ளக்கூடும். இவ்வாறாக நாம் நம்முடைய சித்தத்தின் பெலனை உபயோகித்து அன்பான சிந்தனைகளை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அந்த சிந்தனைகளைக் கொண்டு, நம்முடைய பொருளாசையைத் திறமையாகக் கட்டுப்படுத்தும் விதத்தில் அதை எதிர்த்து செயல்படும்படி நம்முடைய தியாக அன்பைத் தூண்ட வேண்டும்.

*43.* மற்ற காரியங்களுடன் இவ்வித அன்பான சிந்தனைகள் இவ்வாறாயிருக்கின்றன: *(1)* நான் நல்ல கோட்பாடுகளில் மன மகிழ்ச்சியாயிருக்கிறேன். *(2)* நல்ல கோட்பாடுகளுடன் இணக்கமாயிருந்து, அவைகளோடு ஒத்துணர்வான ஒருமைப்பாடு கொள்கிறவர்களில் நான் மன மகிழ்ச்சியாயிருக்கிறேன். *(3)* தேவன் மற்றும் கிறிஸ்து நல்ல கோட்பாடுகளுக்கெதிராக நடத்தப்பட்டிருந்ததினால் நான் அவர்களோடு ஒத்துணர்வு கொள்கிறேன். *(4)* என் சகோதரர்கள் நல்ல கோட்பாடுகளுக்கெதிராக நடத்தப்படும் போதும், அவர்கள் ஏதேனுமொரு அளவிற்கு நல்ல கோட்பாடுகளுக்கு இணக்கமற்றவர்களாக இருக்கும்போதும் நான் அவர்களோடு ஒத்துணர்வு கொள்கிறேன். *(5)* உலகத்தார் நல்ல கோட்பாடுகளுக்கு எதிரிடையாக நடத்தப்படும் போதும், அவர்கள் நல்ல கோட்பாடுகளுக்கு இணக்கமற்றவர்களாக இருக்கும்போதும் நான் அவர்கள் மேல் இரக்கங் கொள்கிறேன். *(6)* என்னிடமுள்ள தேவனுடைய காரியங்கள் என்னவாக இருந்தாலும் நான் அவைகளுக்கு உக்கிராணக்காரனாக இருக்கிறேன். ஏனென்றால் மற்றவர்களை ஆசீர்வதிப்பதில் அவருடைய நோக்கத்தின் முன்னேற்றத்திற்காக அவருடைய ஊழியத்தில் எனக்குரிய சகலமும் உபயோகிக்கப்படும் படிக்கு நான் என்னைப் பிரதிஷ்டை செய்திருக்கிறேன். *(7)* சகோதரர்களையும் உலகத்தாரையும் ஆசீர்வதிப்பதில், நல்ல கோட்பாடுகளின் முன்னேற்றத்திற்காக, என் வருவாய், நேரம், திறமை, பலம், உடற்நலம், பதவி, நற்பெயர், ஆம் என்னுடைய ஜீவனையும் தேவனுக்குக் கொடுக்க நான் மன மகிழ்கிறேன். *(8)* பலி செய்து, தியாக அன்பின் நறுமணத்துடன் நான் தேவனுடைய சித்தத்தைச் செய்ய மகிழ்ச்சியாயிருக்கிறேன்.

*44.* நம்முடைய சித்தத்தின் வல்லமையை உபயோகித்து, இந்த சிந்தனைகளை நம்முடைய மனதிலும் இருதயத்திலும் வைத்து கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய பொருளாசை, கஞ்சத்தனம், அபகரிக்கும் தன்மை, கருமித்தனம், பொருளைச் சேர்த்து வைத்தல் ஆகியவற்றை எதிர்த்து செயல்படும்படி நம்முடைய சித்தத்தின் வல்லமையைக் கொண்டு நம்முடைய தியாக அன்பைத் தூண்டும்போது, அது அந்த தவறைத் திறமையாகக் கட்டுப்படுத்தும். அது நம்மை மிகுந்த தாராள குணமுடையவர்களாகவும், பெருந்தன்மையுள்ளவர்களாகவும் ஆக்கும்.

*45.* நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்தும் செயல்முறைகளை ஆராயும்போது, உயர்நிலை முதன்மை குணநலன்கள் செயல்படுத்தும் கட்டுப்பாடுகளை மட்டுமே நாம் கருத்தில் கொண்டோம். நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் நம்முடைய தாழ்நிலை முதன்மை குணநலன்களை உபயோகித்து மேலே சொல்லப்பட்ட விளைவுகளுக் கொத்த விளைவுகளைப் பெற்றுக் கொள்ள இந்த செயல்முறையை நாம் விளக்கக் கூடும். நம்முடைய பத்து தாழ்நிலை சுயநல முதன்மை குணநலன்களில், மற்றெல்லா குணநலன்களை விட சண்டை செய்யும் குணம் மற்றும் வலிய போராடும் குணம் இதில் அதிகமாக உதவும். ஆனால் மற்றவைகளையும் கூட அவ்வாறு உபயோகிக்கக் கூடும். நம்முடைய தாழ்நிலை சமூக முதன்மை குணநலன்களில் சில குணநலன்களும் இதற்கு உதவும். விசேஷமாக எதிர்பாலின விருப்பம், கணவன் மற்றும் மனைவிக்குரிய பற்று, பிள்ளைகளுக்குரிய பற்று, நட்பு, தேசப்பற்று ஆகியவைகள் இதற்கு உதவும். சுறுசுறுப்பான உழைப்பு, தைரியம், பொறுத்துக் கொள்ளும் தன்மை, நீடிய சகிப்பு, தாராள குணம், சுயத்தியாகம் போன்ற இரண்டாம் நிலை குணநலன்களும் இந்த செயல்முறையை அப்பியாசிக்க உதவும். வைராக்கியம், கீழ்ப்படிதல், நற்குணம், போற்றி துதிக்கும் பயபக்தி போன்ற மூன்றாம் நிலை குணநலன்களும், நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்தும் இந்த செயல்முறையை திறமயாக அப்பியாசிக்க உதவும்.

*46.* ஒவ்வொரு குணநலன் சம்பந்தமாகவும், அவைகளுக்கு பொருந்தும் வேதாகம சிந்தனைகளையும், அவைகளுடைய செயல்பாடுகளையும் அவைகளோடு தொடர்புடைய காரியங்களையும், நம்முடைய சித்தத்தின் வல்லமையைக் கொண்டு, இருதயத்திலும் மனதிலும்

வைத்துக் கொள்ள வேண்டும். அந்த குணநலம் திறமை யுடன் செயல்படும்வரை அவ்வாறு செய்யும்போது, அது நாம் மேற்கொள்ள விரும்புகிற தவறை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தும். இந்த செயல்முறை சம்பந்தமாக மேலே கொடுக்கப்பட்ட உயர்நிலை முதன்மை குணநலன்களின் எடுத்துக்காட்டுகள் இந்த காரியத்தைத் தெளிவாக்கி இருக்கின்றன என்று நாங்கள் நம்புகிறோம். ஆகையால் சற்றுமுன் சொல்லப்பட்ட மற்ற குணநலன்கள் சம்பந்த மாக அதை விளக்க அவசியமில்லை என்று நாங்கள் நம்புகிறோம்.

## உயர்நிலை முதன்மை குணநலன்கள் மற்றும் மூன்றாம்நிலை குணநலன்கள் நம்முடைய தவறுகளின் மேல் ஆதிக்கம் செய்வதின் மூலம் அவைகளை அடக்கியாளுவது

*47.* நம்முடைய தவறுகளை நம்முடைய குணநலன்களினால் கட்டுப்படுத்துவதற்கு மிகவும் ஒத்த தான மற்றொரு செயல்முறையையும் நாம் இங்கே கருத்தில் கொள்ளக் கூடும். அதுவும் முன் சொல்லப்பட்ட செயல் முறைக்கு ஒத்ததாகக் கிரியை செய்யும். ஆனால் இந்த செயல்முறையைக் கையாலும் குணநலன்கள் உயர் நிலை முதன்மை குணநலன்கள் மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களாக மட்டுமே இருக்க வேண்டும். அந்த செயல்முறை உயர்நிலை முதன்மை குணநலன்கள் மற்றும் மூன்றாம் நிலை குணநலன்கள் நம்முடைய தவறுகளின் மேல் ஆதிக்கம் செய்வதின் மூலம் அவைகளை அடக்கி யாளுவதென்பதாகும். தாழ்நிலை முதன்மை மற்றும் இரண்டாம் நிலை குணநலன்கள் ஒருபோதும் மேலா திக்கம் செய்யக் கூடாது. ஆனால் நம்முடைய மேலா திக்கம் செய்யும் குணநலன்கள் நம்முடைய தவறுகளை அடக்கியாளும்போது, அவைகளோடு ஒத்துழைக்கக் கூடும். ஆனால் அவைகள் இந்த செயல்முறையைத் தனியாகக் கையாளக்கூடாது. ஆனால் மூன்றாம் நிலை குணநலன்கள் எல்லாவற்றிலும் உயர்நிலை முதன்மை குணநலன்கள் பிரதானமாக இணைந்திருப்பதால், ஆதிக் கம் செய்யும் குணநலன்களின் மூலம் நம்முடைய தவறுகளை அடக்கும் செயல்முறையை மூன்றாம் நிலை குணநலன்கள் கையாளக்கூடும்.

*48.* ஆனால் மேலே குறிப்பிடப்பட்டதைப் போல், இந்த முறையானது, உயர்நிலை முதன்மை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களைக் கொண்டு நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்துவதற்கு மிகவும் ஒத்ததா யிருக்கிறது. ஆகையால் அதை இங்கே திரும்ப விளக்கு வது தேவையற்றதாகும். ஆனால் இந்த இரு முறை களினால் வரும் விளைவுகள் வெவ்வேறாக இருக் கின்றன. நம்முடைய தவறுகளைக் கட்டுப்படுத்துவ தென்பது, அந்த தவறுகளின் செயல்பாட்டைத் தடுத்து, அவைகளுக்கெதிரான குணநலன்களை வளர்த்துக் கொள்வதற்கு வழியை ஆயத்தப்படுத்தும். ஆனால் அந்த எதிரிடையான குணநலன்களின் அபிவிருத்தியை, விசேஷ மாக இரண்டாம் நிலை குணநலன்களின் அபிவிருத்தியை இந்த செயல்முறை விளைவிக்காது. ஆனால் நம்முடைய தவறுகளை அடக்கி ஆளுவது என்ற செயல்முறையானது, அந்த தவறுகளின் செயல்பாட்டைத் தடுப்பது மட்டுமல்ல, அவைகளுக்கெதிரான குணநலன்களை, விசேஷமாக இரண்டாம் நிலை குணநலன்களை வளர்த்துக் கொள் வதையும் உண்மை நிகழ்வாக விளைவிக்கும். ஆகையால் இரு செயல்முறைகளில் இது அதிக பலன் தரும்.

## தவறுகளை நீக்கி, அவைகளுக்கெதிரிடையான குணநலன்களை அவைகளினிடத்தில் நிலைநாட்டுவது

*49.* நம்முடைய நரிகளை நமக்காகப் பிடிப்பதில் நாம் அப்பியாசிக்க வேண்டிய ஏழாம் செயல்முறை இவ்வாறாயிருக்கிறது: தவறுகளை நீக்கி, அவைகளுக் கெதிரிடையான குணநலன்களை அவைகளினிடத்தில் நிலைநாட்டுவது. ஆனால் தவறுகளைக் கட்டுப்படுத்தும் செயல்முறையை உபயோகித்து, எதிரிடையான குண நலன்களை வளர்த்துக் கொள்வதற்கான வழியை ஆயத் தம் செய்து, தவறுகளை அடக்கி ஆளும் செயல்முறை களின் மூலம் நம்முடைய தவறுகளுக்கு எதிரிடையான குணநலன்களை ஓரளவிற்கு உண்மை நிகழ்வாக உருவாக்கும் வரை நாம் இந்த செயல்முறையை உபயோ கிக்கக் கூடாது. ஆனால் அவ்வாறு செய்த பிறகு, ,நம்முடைய பெரிய மற்றும் சிறிய நரிகளை நமக்காகப் பிடிப்பதற்காகத் திறமையாக உபயோகிக்கக் கூடிய ஒரு சிறந்தமுறை நம்மிடமிருக்கும்.

*50.* நம்முடைய தவறுகள் நம்முடைய மதரீதி யான, கலைசார்ந்த. மனரீதியான, சுயநல மற்றும் சமூக ரீதி யான திறமைகளில் இருக்கக் கூடும். சுருக்கமாகச் சொன் னால் நம்முடைய மூளையிலுள்ள திறமைகள் ஏதேனு மொன்றில் அவைகள் இருக்கக் கூடும். நம்முடைய தவறுகளுக்கெதிராகச் செயல்படும் படி நம்முடைய குணநலன்களைத் தூண்டுகிற வேதாகம சிந்தனைகளை, நம்முடைய சித்தத்தின் பலத்தை உபயோகித்து, நம் முடைய மனதிலும் இருதயத்திலும் வைத்து எவ்வாறு நம்முடைய குணநலன்களைத் தூண்ட வேண்டுமென்று நாம் ஏற்கனவே பார்த்தோம். இதே செயல்பாடு இந்த செயல்முறையிலும் உபயோகிக்கப்படுவதால், அந்த தவறுகளை நீக்கி அவைகளுக்கெதிரிடையான குணநலன் களை நிலை நாட்டுவதற்கு அந்த குணநலன்களை எவ்வாறு தூண்ட வேண்டுமென்று இங்கே விவரிப்பது தேவையற்றதாகும். ஏனென்றால் இவ்வித தூண்டுதல் களைக் குறித்து நாம் ஏற்கனவே போதுமான அளவிற்கு ஆராய்ந்திருக்கிறோம்.

*51.* அந்த தவறுகளை நீக்கும் இந்த செயல் முறையானது எவ்வாறு செயல்படும் என்பதைத் தெளிவாக்கும் சில காரியங்களை இங்கே கருதுவது ஏற்ற தாயிருக்கும். இந்த கொள்கைகள் எளிமையானதாகவும், எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. இயற்கையில் இரு திடப்பொருள்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்திலிருக்க முடியாது. ஒன்று மற்றொன்றின் இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமானால், அந்த பொருளோ அல்லது வேறெதெனும் ஒரு காரியமோ முன்பு அவ்விடத்திலிருந்து பொருளை அகற்ற வேண்டும். அதுபோலவே மனம் மற்றும் இருதயத்தின் செயல் எல்லையில், ஒரு தவறு மற்றும் ஒரு குணநலன் ஒரே நேரத்தில் மூளையில் ஒரே திறமையை நிரப்ப முடியாது. ஒரு தவறினால் ஓரளவிற்கு நிரப்பப்பட்ட மூளையின் திறமையை அதற்கு எதிரிடையான குண நலத்தினால் நிரப்புவதற்கு, அந்த குணநலன் அந்த தவறை அவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டும்.

*52.* இதைச் செய்வதற்குரிய வேறொரு உதார ணத்தைப் பார்ப்போம். கீழ்பகுதியைவிட மேல்பகுதி

அகலமாகவும் பக்கங்கள் மேலிருந்து கீழ் வரை அளவில் படிப்படியாகக் குறைந்து கொண்டிருக்கிறதுமான ஒரு வாளியில் தண்ணீர் நிரப்பி இருக்கிறதென்று கருதுவோம். அந்த வாளியிலுள்ள தண்ணீரை வெளியேற்றுவதற்கு அல்லது அகற்றுவதற்கு மற்ற முறைகளுக்குக் கூடுதலாக நாம் பின்வரும் முறையை உபயோகிக்கக் கூடும். சரியாக அதே அளவும், அதே வடிவமுமுடைய வேறொரு வாளியை இந்த வாளிக்குள் வைத்து, அதின் கீழ்பகுதி முன்பிருந்த வாளியின் கீழ்பகுதியுடன் பொருந்தும் வரை அதை வலிமையுடன் அழுத்தி, அந்த இரு வாளிகளின் கீழ்பகுதிகளுக்கிடையில் வெற்றிடம் ஏற்படுமளவிற்கு அழுத்தும் போது அதிலுள்ள தண்ணீர் வெளியேற்றப் படும். அது போலவே நம்முடைய இருதயத்தைத் தீட்டுப் படுத்துகிற தவறுகளுக்கு எதிரிடையான குணநலன் களினால் நம்முடைய இருதயத்தை முயன்று நிரப்பும் போது, அதிலுள்ள தவறுகள் வெளியேற்றப்படும்.

*53.* இவ்வாறாக *(1)* விசுவாச உறுதியை ஊக்கு விக்கும் சிந்தனைகளினால் வளர்க்கப்பட்டு, தொடர்ந்து பெருகுகிற விசுவாசத்தின் மூலம் நாம் நம்முடைய சந்தேகங்களையும் அவிசுவாசங்களையும் அகற்ற முடி யும். *(2)* நம்முடைய நம்பிக்கையை ஊக்குவிக்கும் சிந்தனைகளினால் உருவாக்கப்பட்டு, தொடர்ந்து பெருகு கிற நம்பிக்கையின் மூலம் அதைரியத்தையும் மனமுறி வையும் அகற்றக் கூடும். *(3)* சுயகட்டுப்பாட்டை ஊக்கு விக்கும் சிந்தனைகளின் மூலம் அபிவிருத்தி செய்யப் பட்ட சுயகட்டுப்பாட்டின் மூலம் நம்முடைய சிந்திக் காமல் செயல்படும் தன்மையையும் தீர்மானமின்மையை யும் அகற்றக் கூடும். *(4)* பொறுமையை ஊக்குவிக்கும் சிந்தனைகளின் மூலம் நம்முடைய நிலையற்ற தன்மை யையும், நம்முடைய நோக்கங்களை கைவிடும் தன்மை யையும் அகற்றக் கூடும். *(5)* தேவனிடத்திலும் கிறிஸ்து வினிடத்திலும் கடமை அன்பைத் தூண்டும் சிந்தனை களின் மூலம் நம்முடைய தேவபக்தியின்மையையும் போற்றி துதிக்கும் பயபக்தியின்மையையும் அகற்றக் கூடும். *(6)* பிறனை நேசிக்கும் சிந்தனைகளினால் தூண்டப் பட்டு, தன்னைப் போல் பிறனை நேசிக்கும் அன்பினால், பிறரிடம் நாம் வெளிப்படுத்தும் அக்கறையின்மை, வெறுப்பு; தீய எண்ணம் ஆகியவற்றை அகற்றக் கூடும். *(7)* தியாக அன்பென்பது தேவனிடத்திலும், கிறிஸ்து வினிடத்திலும். சகோதரர்களிடத்திலும், மனுகுலத் தினிடத்திலும், சத்துருக்களினிடத்திலுமுள்ள நன்மை யைக் கண்டு மகிழும். மேலும் அவர்களோடு ஒத்துணர்வுடைய ஒருமைப்பாட்டைக் கொள்ளும். மேலும் அவர்கள் தவறாக நடத்தப்படும்போது அவர் களோடு ஒத்துணர்வு கொள்ளும். சகோதரர்கள், உலகத் தார் மற்றும் சத்துருக்களிலுள்ள தவறுகளுடன் இரக்கம் கொள்ளும். மேலும் தேவனுடைய திட்டத்தில் அவர் களுக்கிருக்கிற நிலைக்கேற்றவாறு அவர்களுக்காக ஜீவனை பலி செய்வதில் மகிழும். இவ்வித தியாக அன்பை உருவாக்கும் சத்தியத்தின் மூலம், இது வரை நாம் அவர்களிடம் வெளிப்படுத்தின மதித்துணருதலின்மை, ஒத்துணர்வின்மை, இரக்கமின்மை, அவர்களுக்கு ஊழி யஞ் செய்யாமலிருப்பது ஆகியவைகளை அகற்ற வேண்டும். இவ்வாறாக உயர்நிலை முதன்மை பண்பு களிலுள்ள தவறுகள் ஒவ்வொன்றையும், அதற்கெதி ரிடையான உயர்நிலை முதன்மை குணநலத்தைக் கொண்டு அகற்ற வேண்டும்.

*54.* அது போலவே நம்முடைய மூளையின் தாழ்நிலை முதன்மை திறமைகளை நிரப்புகிற தவறுகளை நீக்குவதற்கு, அவைகளுக்கு எதிரிடையான குணநலன் களாகிய இரண்டாம் நிலை குணநலன்களை அவைகளி னிடத்தில் வைக்க வேண்டும். இவ்வாறாக *(1)* சுயத்தில் அதிருப்தி, சுயத்தை தாழ்த்துதல், தகுந்த அளவிற்குச் சுயத்தில் நம்பிக்கையின்மை ஆகிய வடிவங்களில் வெளிப்படும் மனத்தாழ்மையைக் கொண்டு, சுயத் திருப்தி, சுயத்தை உயர்த்துதல், மிதமிஞ்சிய தன்னம் பிக்கை ஆகியவற்றில் வெளிப்படும் பெருமையை அகற்றக் கூடும். *(2)* தன்னடக்கம், எளிமை, தன்னை முனைப்பாகக் காட்டாமலிருப்பது ஆகியவற்றின் மூலம் வீண்புகழ்ச்சி, பகட்டு, ஆடம்பரம் ஆகியவற்றை அகற்றக் கூடும். *(3)* சுறுசுறுப்பான உழைப்பைக் கொண்டு சோம் பலையும், வேலை செய்யாமலிருப்பதையும் அகற்றக் கூடும். *(4)* தைரியம் மற்றும் பொருத்தமான துணிவு ஆகிய வற்றைக் கொண்டு நம்முடைய கோழைத்தனத்தையும் மிதமிஞ்சிய எச்சரிக்கை தன்மையையும் அகற்றக் கூடும். *(5)* நேர்மை, ஒளிவு மறைவின்மை, கபடமின்மை ஆகிய வற்றைக் கொண்டு நேர்மையின்மை, மாய்மாலம், வஞ்சனை ஆகியவற்றை அகற்றக் கூடும், *(6)* தாராள குணம், மனரம்மியம், பெருந்தன்மை, உதாரகுணம், கனிவு ஆகியவற்றைக் கொண்டு பொருளாசை, அபகரித்தல், கஞ்சத்தனம், பொருள்களைச் சேகரிக்கும் தன்மை, கருமித்தனம் ஆகியவற்றை அகற்ற வேண்டும். *(7)* சமாதான விருப்பம், நீடிய சகிப்பு ஆகியவற்றைக் கொண்டு நம்முடைய சண்டை செய்யும் தன்மையையும் கோபத்தையும் அகற்ற வேண்டும். *(8)* பொறுத்துக் கொள்ளும் தன்மை, மன்னிக்கும் தன்மை, கனிவான இருதயம், அன்பு ஆகியவற்றைக் கொண்டு நம்முடைய கடும் கோபத்தையும் விட்டு கொடாதிருக்கும் தன்மை யையும் வன்மத்தையும் வெறுப்பையும் அகற்ற வேண்டும். *(9)* மட்டான உணவு பழக்கத்தைக் கொண்டு நம்முடைய பெருந்திண்டியை அகற்றக் கூடும். *(10)* சுயத்தைப் பலி செய்யும் குணத்தின் மூலம் சுயத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் தன்மையை அகற்ற வேண்டும்.

*55.* இவ்வாறாக நம்முடைய மதரீதியான மற்றும் சுயநல இயல்புகளிலுள்ள தவறுகளை, அவைகளுக் கெதிரிடையான குணநலன்களைக் கொண்டு எவ்வாறு அகற்ற வேண்டுமென்பதை நாம் பார்த்தோம். ஒவ்வொரு காரியத்திலும், சித்தத்தின் வல்லமையை உபயோகித்து, அந்த குணநலன்களை உருவாக்கும் சிந்தனைகளை இருதயத்திலும் மனதிலும் வைத்து அவைகளுக்குக் கீழ்ப் படிவதின் மூலம், அந்த எதிரிடையான குணநலத்தின் செயல்பாட்டைத் தூண்ட வேண்டும்.

*56.* நம்முடைய சமூக தாழ்நிலை முதன்மை குணநலன்கள் சிலவற்றை சம்பந்தப்பட்ட தவறுகளைக் குறிப்பிடுவதற்கு நம்முடைய மொழியில் வார்த்தைகள் இல்லாததை நாம் காண்கிறோம். ஆகையால் அவ்வித குணநலன் சம்பந்தப்பட்ட சீர்கேடுகளைக் குறிப்பிடும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு அந்த சமூக தாழ்நிலை முதன்மை குணநலன்களின் பெயர்களுக்கு முன்பு "தவறான" என்ற வார்த்தையைக் கூட்டுகிறோம். எடுத்துக்காட்டாகத் தவறான எதிர்பாலின விருப்பம், கணவனுக்குரிய தவறான பற்று, மனைவிக்குரிய தவறான பற்று, பெற்றோருக்குரிய தவறான பற்று, பிள்ளைகளுக் குரிய தவறான பற்று, சகோதரருக்குரிய தவறான பற்று, சகோதரிக்குரிய தவறான பற்று, தவறான நட்பு, வீட்டின் மேல் தவறான பற்று, தவறான தேசப்பற்று. சமூக குணநலன்களிலுள்ள சீர்கேட்டினால் வரும் தவறுகளைக் குறிப்பிடுவதற்குரிய வார்த்தைகளைப் பார்த்தபிறகு, நம்முடைய சமூக தாழ்நிலை முதன்மை குணநலன் களிலுள்ள சீர்கேடு சம்பந்தப்பட்ட தவறுகளை அவை

களுக்கெதிரிடையான குணநலன்களைக் கொண்டு அகற்றுவதற்குரிய செயல்முறையைக் கருத்தில் கொள்ள ஆயத்தமாயிருக்கிறோம்.

*57.* ஒவ்வொரு தவறை அகற்றும் காரியத்தில், அதை அகற்றும் செயலில் ஈடுபடும்படி அதற்கெதிரிடையான குணநலன் தூண்டப்பட வேண்டும் என்பதை நாம் நினைவு கூருவோமாக. அதாவது அந்த எதிரிடையான குணநலத்தைச் செயல்படச் செய்யும் வேதாகம சிந்தனைகளை நம்முடைய சித்தத்தின் பெலத்தைக் கொண்டு பணிவுள்ள இருதயம் மற்றும் மனதில் வைப்பதின் மூலம் அதைச் செய்ய வேண்டும். இவ்வாறாகத் தவறான எதிர்பாலின விருப்பம் என்பது சரியான எதிர்பாலின விருப்பத்தைக் கொண்டு அகற்றப்பட வேண்டும். கணவனுக்குரிய தவறான பற்றென்பது கணவனுக்குரிய சரியான பற்றைக் கொண்டும், மனைவிக்குரிய தவறான பற்றென்பது மனைவிக்குரிய சரியான பற்றைக்கொண்டும், பெற்றோருக்குரிய தவறான பற்றென்பது பெற்றோருக்குரிய சரியான பற்றைக் கொண்டும், பிள்ளைகளுக்குரிய தவறான பற்றென்பது பிள்ளைகளுக்குரிய சரியான பற்றைக் கொண்டும், சகோதரருக்குரிய தவறான பற்றென்பது சகோதரருக்குரிய சரியான பற்றைக் கொண்டும், சகோதரிக்குரிய தவறான பற்றென்பது சகோதரிக்குரிய சரியான பற்றைக் கொண்டும், தவறான நட்பு என்பது சரியான நட்பைக் கொண்டும், வீட்டின்மேல் தவறான பற்றென்பது வீட்டின் மேல் சரியான பற்றைக் கொண்டும், தவறான தேசப் பற்றென்பது, சரியான தேசப் பற்றைக் கொண்டும் அகற்றப்பட வேண்டும்.

*58.* அது போலவே நம்முடைய மூன்றாம் நிலை குணநலன்கள் சம்பந்தப்பட்ட சீர்கேட்டை அர்த்தப்படுத்துகிற தவறுகளும் இருக்கின்றன. அவைகளையும் அவைகளுக்கு எதிரிடையான மூன்றாம் நிலை குணநலன்களைக் கொண்டு அகற்ற வேண்டும். இவ்வாறாக நம்முடைய பணிவு நயத்தைச் சேதப்படுத்துகிற "கற்பிக்கப்பட முடியாத தன்மை" மற்றும் "பிடிவாதம்" என்பவைகள் மனதிலும் இருதயத்திலுமுள்ள பணிவு நயத்தின் பணிவிணக்கத்தினால் *(submissiveness)*அகற்றப்பட வேண்டும். வைராக்கியமின்மையின் மந்தமான தன்மை என்பது வைராக்கியத்தைக் கொண்டு அகற்றப்பட வேண்டும். முரட்டுத்தனம் மற்றும் மூர்க்கத்தனமென்பவைகள் மென் நயத்தைக் கொண்டு அகற்றப் பட வேண்டும். கட்சிப் பற்று *(sectarianness)* என்பது நற்குணத்தைக் *(magnanimity – பரந்த மனப்பான்மை)* கொண்டு அகற்றப்பட வேண்டும். தீவிரவாதமென்பது நடுநிலையோடிருத்தல் என்ற பண்பைக் கொண்டு அகற்றப்பட வேண்டும். பாரபட்சமென்பது பாரபட்சமின்மையைக் கொண்டு அகற்றப்பட வேண்டும். கீழ்ப்படியாமை என்பது கீழ்ப்படிதலைக் கொண்டும், பயபக்தியின்மை என்பது போற்றி துதிக்கும் பயபக்தியைக் கொண்டும், விசுவாச உண்மைத்துவமின்மை என்பது விசுவாச உண்மைத்துவத்தைக் கொண்டும், அகற்றப்பட வேண்டும்.

*59.* நாங்கள் ஏற்கனவே பலமுறை குறிப்பிட்டதைப் போலவே நம்முடைய சமூக பற்றுதல்கள் சம்பந்தப்பட்ட இரண்டாம் நிலை குணநலன்களில், கற்புடைமை என்ற வார்த்தையைத் தவிர மற்ற குணநலன்களை குறிப்பிடும் வார்த்தைகள் நம்முடைய மொழியில் இல்லை என்று குறிப்பிடுகிறோம். கற்புடைமை என்பது தவறான எதிர் பாலின விருப்பத்தைக் கட்டுப்படுத்துவதினால் உருவாகும் இரண்டாம் நிலை குணநலனாகும் (இது எதிர் பாலினரை மதித்துணரக் கூடாது என்பதை அர்த்தப்படுத்தாது). ஆனால் நம்மைக் கட்டுப்படுத்தும்படி கணவனுக்குரிய பற்று, மனைவிக்குரிய பற்று, பெற்றோருக்குரிய பற்று, பிள்ளைகளுக்குரிய பற்று, சகோதரருக்குரிய பற்று, சகோதரிக்குரிய பற்று, நட்பு, வீட்டின் மேல் பற்று, தேசப்பற்று ஆகியவைகள் செய்யும் முயற்சிகளை அடக்குவதினால் உருவாகும் இரண்டாம் நிலை குணநலன்களைக் குறிப்பிடுவதற்கு நம்முடைய மொழியில் வார்த்தைகள் இல்லை. ஆனால் இவ்வித குணநலன்களே இல்லை என்பதை இது அர்த்தப்படுத்தாது. மாறாக இந்த குணநலன்களுக்கு நம்முடைய மொழியில் எந்த பெயர்களும் கொடுக்கப்படவில்லை என்பதையே அர்த்தப்படுத்தும். எடுத்துக்காட்டாக, ஒரு கணவன்மேல் தன் மனைவி அதிகாரத்தைச் செலுத்த நாடும்போது, அந்த கணவன் உயர்நிலை முதன்மை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களைக் கொண்டு அதை அடக்கும்போது ஒரு குணநலத்தை அப்பியாசிக்கிறான். அதுபோலவே ஒரு மனைவியின் மேல் கணவன் தவறான அதிகாரம் செலுத்தும்போது அவள் அதை அடக்குவதின் மூலமும், பிள்ளைகள் பெற்றோர்களின்மேல் அதிகாரம் செலுத்தநாடும்போது பெற்றோர்கள் அதை அடக்குவதின் மூலமும், பெற்றோர்கள் பிள்ளைகளின்மேல் தவறான அதிகாரம் செலுத்த நாடும்போது, பிள்ளைகள் அதை அடக்குவதின் மூலமும், குடும்பத்திலோ அல்லது சபையிலோ சகோதரர்கள் தங்கள் சகோதரர்கள் மேல் அதிகாரம் செலுத்த நாடும்போது அதை அடக்குவதின் மூலமும், நண்பர்களின் மேல் நண்பர்கள் அதிகாரத்தைச் செலுத்த நாடும்போது அதை அடக்குவதின் மூலமும், அரசாங்கம் தவறான விதத் தில் பிரஜைகளின்மேல் அதிகாரம் செலுத்தும் போது அதை அடக்குவதின் மூலமும் அவர்கள் ஒவ்வொருவரும் அந்த சூழ்நிலைக்கேற்ற இரண்டாம் நிலை குணநலன்களை அப்பியாசிக்கிறார்கள்.

*60.* இதற்கொரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம்: பல வருடங்களுக்கு முன் ஒரு யூத இளைஞன் கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக் கொண்டான். ஒரு பிள்ளை பெற்றோருக்குக் கட்டாயமாகக் கீழ்ப்படிய வேண்டுமென்று கூறி, அந்த பிள்ளை கிறிஸ்துவை மறுதலிக்க வேண்டுமென்று தகப்பன் கோரினார். தகப்பனுக்குக் கீழ்ப்படிவது பிள்ளையின் கடமையாக இருந்தாலும், இந்த விஷயத்தில் அந்த பிள்ளை உயர்நிலை முதன்மை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களால் கட்டுப்படுத்தப்பட்டவனாக தகப்பனுக்குக் கீழ்ப்படிய மறுத்தான்: அதற்கு அந்த தகப்பன் பிள்ளையை பொய் சாட்சிகளோடு யூத நீதிமன்றத்திற்கு முன்பாக நிறுத்தி, அந்த பிள்ளையைச் சீர்திருத்த முடியாத ஒருவனாக முடிவு செய்து, இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் பள்ளியில் சேர்ந்தார்கள். அந்த பிள்ளை கர்த்தராகிய யெஷுஆவை மறுதலித்தால், அந்த பள்ளியிலிருந்து விடுவிப்பதாக அந்த தகப்பனும் மற்றவர்களும் அவனுக்குப் பலமுறை வாய்ப்பளித்தார்கள். ஆனால் அந்த இளைஞன் திரும்பத் திரும்ப அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கே அந்த இளைஞன் ஒரு இரண்டாம் நிலை குணாம்சத்தை அப்பியாசித்தான். அதாவது அவன் மேல் தவறான அதிகாரத்தைச் செலுத்த அவனுடைய தகப்பன் செய்த முயற்சிகளை அவன் உயர்நிலை முதன்மை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களைக் கொண்டு அடக்கி ஆளுவதின் மூலம் ஒரு இரண்டாம் நிலை குணநலத்தை அப்பியாசித்தான் ஆனால் இந்த குணநலத்தைக் குறிப்பிட நம்முடைய மொழியில் எந்த வார்த்தையும் இல்லை. மற்ற இரண்டாம் நிலை குணநலன்களின் காரியமும் அவ்வாறே

இருக்கிறது.

*61.* ஒரு மொழியில் புதிய சொற்களை உருவாக்குவதற்குரிய பொதுவான விதி இவ்வாறாயிருக் கிறது. ஆசிரியர்கள் புதிய கண்டு பிடிப்பாளர்கள், விஞ் ஞானிகள், மருத்துவர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர் கள் போன்றவர்கள், அவர்களுடைய சிந்தனைகளைத் தெரிவிப்பதற்கு அவர்களுடைய மொழியில் வார்த்தை கள் இல்லாதபோது, அவர்களுடைய சிந்தனைகளை தெரிவிக்கும் புது வார்த்தைகளை உருவாக்கும் சிலாக் கியம் அவர்களுக்கு இருக்கிறது. ஒரு வேதாகம கருத் துக்கு (என் சரீரத்தை ஒடுக்கி - 1கொரி. 9:27) இணக்கமாக இரண்டாம் நிலை குணநலன்களையும் குறிக்க வார்த்தை கள் இருக்க வேண்டுமென்று நாங்கள் நம்புகிறோம். "என் சரீரத்தை ஒடுக்குகிறேன்" என்பது நம்மைக் கட்டுப்படுத் தும்படி நம்முடைய தாழ்நிலை முதன்மை பற்றுதல்கள் மற்றும் குணநலன்கள் செய்யும் முயற்சிகளை, உயர்நிலை முதன்மை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்கள் அடக்கி ஆளுவதை அர்த்தப்படுத்துகிறது. அதன் மூலம் இரண் டாம் நிலை குணநலன்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அப்பியாசிக்கப்படுகின்றன. ஆகையால் நம்முடைய சமூக தாழ்நிலை முதன்மை குணநலன்களோடு தொடர்புடைய இரண்டாம் நிலை குணநலன்களைக் குறிப்பிடுவதற்கு நாங்கள் "கட்டுப்படுத்தப்பட்ட" என்ற வார்த்தையை அந்த வார்த்தைக்கு முன் கூட்டுகிறோம். நம்மைக் கட்டுப் படுத்தும்படி நம்முடைய தாழ்நிலை முதன்மை குணநலன் களின் முயற்சிகளை அடக்குவதை இது அர்த்தப்படுத் தும்.

*62.* இவ்வாறாக நாம் கட்டுப்படுத்தப்பட்ட எதிர் பாலின விருப்பம், கட்டுப்படுத்தப்பட்ட கணவனுக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட மனைவிக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட பெற்றோருக்குரிய பற்று, கட்டுப் படுத்தப்பட்ட பிள்ளைகளுக்குரிய பற்று, கட்டுப்படுத்தப் பட்ட சகோதரருக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட சகோதரிகளுக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட நட்பு, கட்டுப்படுத்தப்பட்ட வீட்டின்மேல் பற்று மற்றும் கட்டுப் படுத்தப்பட்ட தேசப்பற்று என்ற வார்த்தைகளை உபயோகிக்கிறோம். நம்முடைய சமூக தாழ்நிலை முதன்மை பற்றுதல்கள் மற்றும் குணநலன்கள் சம்பந்தப் பட்ட இரண்டாம் நிலை குணநலன்களுக்குரிய பெயர் களைப் பார்த்தபிறகு, அவைகளை எவ்வாறு அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதை பார்ப்போம். நம்மை கட்டுப்படுத்தும்படி நம்முடைய சமூக தாழ்நிலை முதன்மை பற்றுதல்கள் மற்றும் குணநலன்கள் செய்யும் முயற்சிகளை நம்முடைய உயர்நிலை முதன்மை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்கள் அடக்கி ஆளுவதின் மூலம், நம்முடைய சமூக தாழ்நிலை முதன்மை குணநலன் களின் மிதமிஞ்சிய செயல்பாட்டை அடக்குகிறோம். அதன்மூலம் அந்த சமூக தாழ்நிலை முதன்மை குணநலன் களுக்கு ஏற்ற இரண்டாம் நிலை குணநலன்களை அபிவிருத்தி செய்து கொள்வோம்.

*63.* மிதமிஞ்சிய எதிர்பாலின விருப்பம் நம்மைக் கட்டுப்படுத்த நாடும்போது, உயர்நிலை முதன்மை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்கள் அதைப் பிடித்துக் கொண்டு, அதின் முயற்சிகளை அடக்கி ஆளும்போது கற்புடைமை அபிவிருத்தி செய்யப்படும். அதுபோலவே மிதமிஞ்சிய கணவனுக்குரிய பற்று, மனைவிக்குரிய பற்று, பெற்றோருக்குரிய பற்று, பிள்ளைகளுக்குரிய பற்று, சகோதரருக்குரிய பற்று, சகோதரிகளுக்குரிய பற்று, நட்பு, வீட்டின்மேல் பற்று, தேசப்பற்று ஆகிய வைகள் நம்மைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யும் போது அவைகளைப் பிடித்துக் கொண்டு, இந்த முயற்சிகளை அடக்குவதின் மூலம் அவைகளுக்கேற்ற இரண்டாம் நிலை குணநலன்கள் அபிவிருத்தி செய்யப்படும். அவை களாவன:

கட்டுப்படுத்தப்பட்ட எதிர்பாலின விருப்பம், கட்டுப்படுத்தப்பட்ட கணவனுக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட மனைவிக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட பெற்றோருக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட பிள்ளைகளுக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட சகோதரருக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட சகோதரிகளுக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட நட்பு, கட்டுப்படுத்தப்பட்ட வீட்டின்மேல் பற்று மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட தேசப்பற்று

*49.* ஆனால் நம்முடைய சமூக தாழ்நிலை முதன்மை குணநலன்களின் இந்த மிதமிஞ்சிய செயல் பாடுகள், சுயநலமாக நம்மைக் கட்டுப்படுத்த நாம் இடங் கொடுத்தால், சுயநலமானது இந்த குணநலன்களைக் கட்டுப்படுத்த நாம் இடங்கொடுப்போம் . அது தவறு களாயிருக்கிற இந்த மிதமிஞ்சிய செயல்பாடுகளை, ஏற்கனவவே அதிகாரத்தைச் செலுத்தும் தாழ்நிலை சுயநல தவறுகளுடன் கூட்டி, அவைகளை இன்னும் மோசமானவைகளாக ஆக்கும். அதாவது சுய சித்தம் நம்மை ஆண்டு கொள்ளும். மற்றவர்களுடைய சமூக தாழ்நிலை முதன்மை தவறுகளின் இவ்வித மிகமிஞ்சிய செயல்பாடுகள் நம்மை ஆண்டு கொள்ள நாம் இடங் கொடுக்கும் போது, உலக சித்தத்தை நம்முடைய சொந்த சித்தமாக ஆக்கிக் கொள்கிறோம். இந்த இரு காரியங் களிலும் நாம் நம்முடைய பிரதிஷ்டையை மீறுகிறோம். ஏனென்றால் நாம் பிரதிஷ்டை செய்தபோது, சுயசித்தத் தையும் உலக சித்தத்தையும் விட்டுவிட்டு, தேவனுடைய சித்தத்தை நம்முடைய சித்தமாக ஏற்றுக் கொண்டோம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★


## பெங்களூரு கன்வென்ஷன்

**கர்த்தருக்குச் சித்தமானால்**

**"மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்"**

**சகோதர ஐக்கியக் கூட்டம் , பெங்களூரில்**

**ஆகஸ்ட் மாதம் 8,9,10 தேதிகளில்**

**(வெள்ளி, சனி, ஞாயிறு ) நடைபெறும்.**

"தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்

விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை

இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"

*"நான் விழிக்கும்போது*
*உமது சாயலால் திருப்தியாவேன்"*
*சங்கீதம் 17:15*

### கர்த்தருக்குள் நித்திரையடைந்த நமது சகோதரர்
## வி.எம்.சுப்ரமணியன்
### குறித்த சில ஞாபகார்த்த காரியங்கள்

*1.* கர்த்தருக்குள் நித்திரையடைந்த நமது சகோதரர் வி.எம்.சுப்ரமணியன் அவர்கள் *13.10.1945* அன்று பிறந் தவர். தனது *80*-ஆவது வயதில் *05.04.2025* அன்று இரவு *9.45* மணியளவில் கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார். அவர் தமது *67* வயதில் தன்னை தேவனுக் கென்று பிரத்தியேகப் படுத்தி, கிறிஸ்துவுக்குள்ளான தனது பிரதிஷ்டையை *27.01.2012* அன்று நீர் முழுக்கு ஞானஸ்நானத்தால் அடையாளப்படுத்தினார்.

*2.* இவர் ஆரம்பத்தில் கொண்டிருந்த தேவ நம்பிக்கையற்ற நிலையிலிருந்து *1989*-ல் ஏறக்குறைய தனது *45* வயதில் அதிலிருந்து வெளியே வந்து மெய்யான தேவனையும் தனது இரட்சகரான கிறிஸ்துவையும் தனது விசுவாசத்தின் முழுமைக்குள் ஏற்றுக்கொண்டார். இவர் தமது பிரதிஷ்டை ஜீவியத்தின் ஆரம்பத்திலிருந்தே உண்மையான நிகழ்கால சத்தியத்தை ஏற்றுக்கொண்டு சத்திய ஐக்கியத்திலுள்ள சகோதரர்களால் வழிநடத்தப் பட்டு சத்தியம் பயின்றவர். தான் ஏற்றுக்கொண்ட சத்தியத்திற்கு திடமனதாயிருந்து, அந்த சத்தியத்திற்கு மற்றவர் மத்தியில் தனது இறுதி நாட்கள் வரை சாட்சி - யாய் நின்றவர். தனது குடும்பத்தாரையும் அந்த சத்தியத் திற்குள் வழிநடத்தி, கிறிஸ்துவுக்குள்ளாக தன்னை காத்துக் கொண்டவர்.

*3.* இவர் தமது ஜீவிய ஓட்டத்தில் ஏறக்குறைய *10* ஆண்டுகளுக்கும் மேலாக சுகவீனமான நிலையிலும் தேவனுடைய பரிபாலன வழிநடத்துதலுக்கு தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவுக்குள்ளான தனது விசுவாசத்தை தனது மரணம் வரை தன்னை உண்மையாய் காத்துக்கொண்டவர். இதற்கு அவருக்கு சகல விதத்திலும் ஆறுதலையும், பெலத்தையும் தந்து வழிநடத்தின தேவ னுக்கு நன்றி செலுத்துவோம்

*4.* *6.4.2025* அன்று மதியம் *1.00* மணி அளவில் "மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்" சகோதர-சகோதரிகளால் நடத்தப்பட்ட அடக்க ஆராதனைக்கு பிறகு, அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. தனது ஜீவிய காலம் முழுவதும் அவர் தனது பிரதிஷ்டையின் ஓட்டத்தை உண்மையாய் காத்துக்கொள்ள இவருக்கு ஜீவனைக்கொடுத்து தமது ஆவி, வார்த்தை, பரிபாலனத் தினால் யெஷுவா கிறிஸ்துவுக்குள் நமது சகோதரரை வழிநடத்தின நமது ஒன்றான மெய் தேவனாகிய மா யாவே தேவனுக்கும், நமது ஆண்டவரும் ரட்சகருமாகிய யெஷுவா கிறிஸ்துவுக்கும் நன்றிகளையும் துதிகளையும் ஏறெடுப்போமாக. ஆமென்.

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது



**அதுமாத்திரமல்ல,**

**உபத்திரவம் பொறுமையையும்,**
**பொறுமை பரீட்சையையும்**
**(அங்கீகாரத்தையும்),**

**பரீட்சை(ஆங்கீகாரம்)**
**நம்பிக்கையையும்**
**உண்டாக்குகிறதென்று**

**நாங்கள் அறிந்து,**

**உபத்திரவங்களிலேயும்**
**மேன்மைபாராட்டுகிறோம்.**

**மேலும் நமக்கு அருளப்பட்ட**
**பரிசுத்த ஆவியினாலே**

**தேவ அன்பு**

**நம்முடைய இருதயங்களில்**
**ஊற்றப்பட்டிருக்கிறபடியால்,**

**அந்த நம்பிக்கை நம்மை**
**வெட்கப்படுத்தாது.**

*ரோம. 5:3-5*

# நமது கர்த்தரின் வருடாந்திர மரண ஞாபகார்த்தம் - 2025
## ஆசரித்தவர்களின் விவரம்

மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தை சேர்ந்த எக்லிஷியா மூப்பர்களிடமிருந்தும், தனி நபர்களிடமிருந்தும் பெற்ற விவரத்தின்படி, கீழ்கண்ட சகோதர, சகோதரிகள் நமது கர்த்தருடைய மரண ஞாபகார்த்தத்தை அவரது அன்பின் கட்டளையின்படி, குறித்த நேரத்தில் நிசான் மாதம் 14 ஆம் நாள், அதாவது இந்த வருடம் ஏப்ரல் மாதம், 10-ஆம் தேதி மாலை 6 மணிக்குப் பின்பு தேவ கிருபையினால் ஆசரித்தனர்.

**கோயம்புத்தூர்**

Br.சேவியர்அந்தோணிசாமி
Br.பால்ராஜ்
Sr.ராணி சுப்பிரமணியன்
Sr.ஷீலா ராஜு
Br.Y.ராஜு
Br.இருதயராஜ்

**சென்னை(திரு.வி.க.நகர்)**

Br. S.சபேஷ்குமார்
Sr. S.அகிலா
Sr. E.ரேவதி
Sr. E.அன்புமணி
Br.M.N.டேவிட்
Br.GP.யோயேல்
Sr. J.ஜென்சி

**சென்னை(திருவள்ளூர்)**

Br.P.புரட்சிமணி
Sr.பிரபாவதி
Sr.பிரிஸில்லா
Br.R.ரவிக்குமார்
Sr.R.சுகந்தி ரவிக்குமார்
Br.R.பிரவீன் குமார்
Sr.அருணா தேவி
Sr.குணபூஷணம்
Sr.A.குமுதினி
Sr.R.ஹேமாவதி
Sr.R.சுபா
Sr.R.விஜயலட்சுமி
Sr.ஜெயமங்களம்
Br.இராமானுஜம்
Sr.எலிசபெத் ஆனந்தன்
Sr.பேபி

**மும்பை**

Br.பிரகாஷ் சர்மா
Sr.ருக்மணி சர்மா
Sr.மெரினா சங்கர்
Br.அனிரூத்
Br.ஷியாம்

**பெங்களூர்**

Br.தமிழரசன்
Br.நிதிஷ் ஜோஷ்வா
Br.கார்த்திக்
Sr.வேல்விழி தமிழரசன்
Sr.அனுராதா
Sr.ரம்யா
Sr.பூர்ணிமா
Sr.பாக்யா
Sr.கேத்தரின்
Sr.லாவன்யா
Sr.மேரி ஜுலியட்
Br.கில்பர்ட் லாரன்ஸ்
Sr.சுகிதா
Sr.பார்கவி
Sr.பிரியா ரெபெக்கா
Br.ஆனந்த்மெல்லம்

**திருச்சி**

Sr.கேத்தரின் மரியா
Br.இராயப்பன்
Br.D.L.மகிலன்
Sr.எஸ்தர் ராணி

**சேத்தியா தோப்பு**

Br.அந்தோணிசாமி

**முதலியார்பேட்-புதுச்சேரி**

Sr.திவ்யா ராணி

**சேலம்**

Br.பீட்டர்
Sr.கிரேஸி
Br.சேகர்
Sr.சிரோன்மணி

**புதுச்சேரி**

Br.ஜுலியன்
Sr.லூர்துமரி
Sr.மேரி ஜாக்குலின்
Sr.சாந்திசரோஜா
Sr.கிரேஸிமார்ஷீயல்
Sr.ரெபெக்கா
Sr.லிடியா
Sr.நான்சி
Br.ஜில்பெர்ட்
Sr.ஜெசிந்தா ஜில்பெர்ட்
Sr.கரோலின் ஜில்பெர்ட
Sr.எஸ்தரின்
Sr.கிறிஸ்டினா
Sr.ஜோஸ்லின் லியா
Br.சிரில் ∴பெர்ணன்டஸ்
Br.லாரன்ஸ் குணசீலன்
Br.கில்ஸ் லாரன்ஸ்
Sr.குளோரியா குணசீலன்
Sr.செசிலியா
Br.மகிமை தாஸ்
Br.ஆமோஸ் பெலிக்ஸ்
Br.ஆபிரகாம் பெலிக்ஸ்
Sr.வினோலியா
Sr.மோத்தி சிப்போராள்
Br.ஆரோக்கியநாதன்பெனார்
Sr.கமலா
Br.A.ஜோஷ்வா பெனார்
Br.A.திலோன் பெனார்
Br.A.சிபியோன் பெனார்
Br.தீபக்பாரதி
Sr.எர்ணஸ்டின் பாரதி
Sr.ஹிமாபிந்து தீபக்
Sr.அனிகா சாரா
Sr.ரீட்டா அந்துவான்
Sr.கிளமந்தைன் மார்த்தாள்
Sr.பிரிஸில்லா
Br.தம்பிதுரை
Sr.செல்வம் நிமாரோசா
Br.அலெக்ஸ் தாசன்
Sr.சுகாசினி
Br.ஆபிரகாம் பிரசன்னா
Br.ஆனந்த நம்பியார்
Br.ஜான் மார்க்
Br.எட்வின்

**கோவா**

Sr.ஜெஸிரேச்சல்

**Naples , Florida, USA**

Sr.ப்ரீட்டி சமீரா
Sr.அத்விகா

**வாஷிங்டன், USA**

Sr.கிரிட்டாமேரி
Sr.கீதா லூர்த்

**Dubai**

Br.கிறிஸ்டோபர் ராஜேஷ்
Sr.ஜுலி கிறிஸ்டோபர்

**Saudi Arabia**

Sr.நகோமி ஜென்ஸி

**Germany**

Sr.பெட்டினா

**London,UK**

Sr.சங்கீதா

**France**

Br.தம்பிராஜா
Br.எட்வர்ட் லூயிஸ்
Br.தீமோத்தேயு
Sr.செல்வம் இமாகுலேட்
Sr.பெபேயாள்
Sr.ரெபெக்கா
Sr.கேத்தரின்
Sr.மரிஸ்டெல்லா
Sr.ஞானப்பூ

நமது கர்த்தரின் மரண ஞாபகார்த்தத்தை ஆசரித்ததினால் உண்டான ஆசீர்வாதங்கள் நம்மோடுகூட இருந்து இந்த வருட முழுவதும் நமது பிரதிஷ்டையை பெலப்படுத்துவதாக.

மேலும் தேவனுடைய கிருபையால் இந்த வருடம் நமது கர்த்தருடைய ஞாபகார்த்தத்தை ஆசரித்து, அதனை, உடன் ஓடிக்கொண்டிருக்கும் விசுவாச வீட்டாருக்கு ஊக்கமூட்டும் வகையில் தெரிவித்து பகிர்ந்து கொண்டவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் என்றென்றும் நிலைத்திருப்பதாக.

பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும், அவரது குமாரனும் நமது கர்த்தருமாகிய யெஷுஆ கிறிஸ்துவிடமிருந்தும் வருகிற கிருபையும், இரக்கமும், சமாதானமும் எப்பொழுதும் நம்மோடிருந்து நம்மை வழி நடத்துவதாக. 2யோவான்.3


**புது உடன்படிக்கை**

*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*